# பயணம்

தர்பியா அமர்வுகளுக்கான இதழ் – 46



# ஒவ்வொரு முஃமினும் சகோதரர் ஆவார்.

ஒரு முறை அபூதர் (ரழி) அவர்கள் பிலால் (ரழி) அவர்கள் மேல் கோபப்பட்டு விட்டார்கள். இரண்டு பேருக்குமிடையே நடந்த வாக்குவாதத்தில் அபூதர் (ரழி) அவர்கள் 'கறுப்பு நிறத்தைக் கொண்ட தாயின் மகனே' எனக் கூறிவிட்டார்கள். இதனை பிலால் (ரழி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் முறையிட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், அபூதர் (ரழி) அவர்களை அழைத்து 'நீங்கள் அவர்களின் தாயை உட்படுத்தும் பெயர் ஒன்றால் பிலால் (ரழி) அவர்களை அழைத்தீரா?' எனக் கேட்டார்கள். பின்னர் 'நீங்கள் இன்னும் அறியாமையின் பிடியிலிருந்து விடுபடவில்லையா?' எனக்கூறி கடிந்து கொண்டார்கள்.

அறியாமை என்பதன் முழுப் பொருளையும் புரிந்திட முடியாத அபூதர் (ரழி) அவர்கள் ஒழுக்கமின்மையைக் குறிக்கும் சொல்லாக எடுத்துக் கொண்டு 'இந்த என் தள்ளாத வயதிலா?' என ஆதங்கத்தோடு கேட்டார்கள். இதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், 'நீங்கள் அவருடைய சகோதரர் ஆவீர்கள். நீங்கள் அவரிடம் கனிவோடு பாசத்தோடு இருத்திட வேண்டும்' என்றார்கள்.


அபூதர் (ரழி) அவர்கள் இந்நிலையில் பெருமானார் (ஸல்) அவர்களின் பதிலின் ஆழத்தை புரிந்து கொண்டார்கள். கண் கலங்கியவர்களாக பிலால்(ரழி) அவர்களை பார்த்து இப்படி கூறினார்கள். ''பிலால் (ரழி) அவ்கனே! என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் கால்களால் என் முகத்தில் மிதியுங்கள்'' என கண்ணீர் மல்க கூறினார்கள்.

- நவாஸ்தீன் மஷாறி,
பாதிஹ் கல்வி நிறுவனம்.

# பயணம்

தர்பியா அமர்வுகளுக்கான இதழ் - 46

ஜூலை - ஓகஸ்ட் 2015



''நீங்கள் வேதத்தைக் கற்றுக் கொடுப்பதன் மூலமும் கற்பதன் மூலமும் அல்லாஹ்வைச் சார்ந்திருங்கள்.''
(ஆல இம்றான் : 79)

பிரதம ஆசிரியர் :
**அஷ்ஷெய்க் அக்ரம் அப்துஸ் ஸமத் (நளீமி)** B.A.(Cey)

ஆசிரியர்:
**அஷ்ஷெய்க் ஏ.எஸ்.எம். நௌஷாட் (நளீமி)** M.A. (Sudan)

ஆசிரியர் குழு:
**அஷ்ஷெய்க் எம்.எப்.எம். பஸ்லான் (நளீமி)** B.A.(Cey)
**அஷ்ஷெய்க் பிஸ்தாமி (நளீமி)** B.A.(Cey)
**அஷ்ஷெய்க் அஹ்ஸன் ஆரிப் (நளீமி)**

தளக்கோலம்:
**அஸார் வஸீர்**

அட்டை வடிவமைப்பு:
**லீனா அக்ரம்**

தனி இதழ்: 60.00
சந்தா விபரம்: ஒரு வருடம் - 300/=
ஆறு மாதங்கள் -150/=

Published by:
**Meelparvai Media Centre**
49, Sri Mahinda Dharma Mawatha, Dematagoda,
Colombo 09. Tel/Fax: 0112 691258, 0772227569
Printed by:
AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwala.

**03** ஸூறா பத்ஹ்
அஷ்ஷெய்க் பெரோஸ் நௌஷாத்

**08** மென்மையான உள்ளங்கள்
கலாநிதி எச்.எல்.எம். ஹாரிஸ்

**13** ஒரு சமூக எழுச்சிப் பாதை
அஷ்ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்

**19** உறவுகளைப் பலப்படுத்தும்...
ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத்

**23** த.்.வாப் பாதையில் நிலைத்து...
அஷ்ஷெய்க் பிஸ்தாமி

**28** குடும்பத் தியாகம்
அஷ்ஷெய்க் ஏ.ஜீ.எம். இர்பான்

**33** நல்ல வார்த்தை பேசுவது
அஷ்ஷெய்க் ரஷாத் மர்ஸூக்

**36** செயற்திறனுள்ள தலைமைத்துவம்
அஷ்ஷெய்க் யூ.கே. றமீஸ்

**39** உளப் போராட்டமே களப் போராட்டம்
ஷெய்க் முஹம்மத் அஹ்மத் ராஷித்

**45** முஹம்மத் ஹஸ்ஸானைன்
அஷ்ஷெய்க் ரஷாத் முஹம்மத்

Editorial

# ரமழானுக்குப் பின்னர்

ரமழான் மாதம் நிறைவடைந்து விட்டது. அது எங்களில் எதனை விட்டுச் சென் றிருக்கிறது? என்ன மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது? நாம் ஒவ்வொருவரும் கட்டாயமாக சிந்திக்க வேண்டிய ஒரு விடயம் இது. ஒவ்வொரு வருடமும் ரமழான் வருகிறது. ஒரு மாதம் எங்களுடன் இருக்கிறது. பின்னர் சென்றுவிடுகிறது. ஆனால் நாங்கள் மட்டும் எந்த மாற்றமுமின்றி இருக்கி றோம் எனின், ரமழானின் நோக்கத்தை நாம் மிகச் சரியாக அடைந்து கொள்ளவில்லையோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது.

அல்லாஹுதஆலா ரமழானின் நோக்கத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, நீங்கள் தக்வா உள்ளவர்களாக மாற வேண்டும் என்பதற்காக என்று குறிப்பிட்டுள்ளான். தக்வா என்றால் என்ன? தக்வா என்பதை மிகப் பெரும்பாலும் நாம் ஒன்றைத் தவிர்ந்து கொள்ளுதல், பயந்து ஒதுங்கி இருத்தல் என்ற எதிர்மறையான பொருளில் மாத்திரமே விளங்கியிருக்கிறோம். ஆனால் தக்வாவிற்கு ஒரு நேர்மறையான கருத்தும் இருக்கின்றது. அதுதான் சுயமாகச் செயற்படுதல் என்பது. அதாவது எந்தவிதமான புறத்தூண்டுதல்களின் அவசியமின்றி உள்ளார்ந்த தூண்டுதலின் அடிப்படையில் மாத்திரம் தொழிற்படும் நிலையை நாம் சுயமாக செயற்படுதல் என்போம். ஒன்றைத் தவிர்ந்து கொள்வதாக இருப்பினும் ஒன்றை செயற்படுத்துவதாக இருப்பினும் அவனுக்கு புறச் சூழலின் தூண்டுதல் அவசியமற்றது. புறக்காரணிகள் இல்லாதபோதும் அவன் செயற்பட்டுக் கொண்டேயிருப்பான். இதுதான் தக்வா என்பதன் அடிப்படையான பொருளாகும்.

இதனைத்தான் நபியவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்: எங்கிருந்தாலும் அல்லாஹ்வைப் பயந்து கொள் என்றார்கள். இதன் பொருள் எந்த சூழ்நிலையில் எந்த இடத்தில் இருக்கின்ற பொழுதும் அந்த இடத்திற்கும் சூழலுக்கும் அவசியமான செயற்பாட்டைதானாகவே நிறைவேற்றுகின்றவனாக அவன் இருத்தல் வேண்டும் என்பதையே இது குறித்து நிற்கிறது. இத்தகைய மனிதர்களாக ரமழானில் நாம் மாறிவிட வேண்டும் அல்லது இந்தப் பண்பை மீண்டும் மீண்டும் எங்களில் ஆழப்பதித்து விட்டுச் செல்வதே ரமழானின் நோக்கமாக இருக்கிறது.


இவ்வருட ரமழான் எங்களைக் கடந்து சென்றுவிட்டது. நாம் எவ்வாறு இருக்கிறோம்? சுயமாக இயங்கிக் கொண்டிருக்கிறோமா? இபாதத்கள், பள்ளிவாயலுனுடனான தொடர்பு, குடும்ப உறவுகள், சமூகப் பணிகள், தஃவா நடவடிக்கைகள் போன்ற அனைத்தும், விசாரணைகளும் கேள்விகளும் இன்றி நடைபெறுகின்றனவா? உங்களது பதில் ‘ஆம்’ என்றிருப்பின், அல்ஹம்துலில்லாஹ் ரமழான் உங்களில் தாக்கத்தை விளைவித்திருக்கிறது என்று கூறலாம்.

இதன் பொருள் ஞாபகமூட்டல்கள், விசாரணைகள், கேள்விகள் என்ற புறக்காரணிகள் அவசியமற்றவை என்பதல்ல. மாற்றமாக இவற்றின் மீது மாத்திரம் ஒரு முஸ்லிமின் செயற் பாடு கட்டமைக்கப்பட மாட்டாது. அவனுக்குள்ளே இருக்கும் ‘டைனமோவின்’ இயக்கத் தினால்தான் அடிப்படையில் அவன் செயற்பட்டுக் கொண்டிருப்பான். ரமழான் மாதம் அந்த டைனமோவை மீண்டும் மீண்டும் ‘ரீ சார்ஜ்’ செய்துகொடுக்கிறது.

எனவே, ரமழானுக்குப் பின்னர் நாம் ஓய்ந்துவிடாதிருப்போம். தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டேயிருப்போம். அல்லாஹ் எமக்கு அந்தப் பாக்கியத்தைத் தருவானாக.

இப்படிக்கு உங்கள் இஸ்லாமிய சகோதரர்கள்

# ஸூறா பத்ஹ்



மொழியாக்கம் செய்யப்பட்ட குர்ஆன் பிரதியுடன் இவ்விளக்கவுரையை வாசிக்க ஆரம்பியுங்கள்.



அஷ்ஷெய்க் பெரோஸ் நௌஷாத்
nawshath1127@gmail.com

திருமறையில் ஸூறா முஹம்மதை அடுத்து இடம்பெற்றுள்ள இந்த ஸூறா ஹுதைபியா உடன்படிக்கையைத் தொடர்ந்து ஹி - 06 இல் அருளப்பட்டது. மூன்று வருட கால இடைவெளி கொண்ட இவ் இரு ஸூறாக்களும் முஸ்லிம் சமூக வளர்ச்சிக் கட்டங்களில் முக்கிய இடம் வகிக்கின்றன.

இக் காலப் பகுதிக்குள்ளால் மதீனா முஸ்லிம் சமூகம் ஈமானிய பலமும் மனோ வலிமையும் சிந்தனை முதிர்ச்சியும் கண்டமை முக்கிய அம்சமாகும். ஹுதைபியா உடன்படிக்கையும் மக்கா வெற்றியும் முஸ்லிம்களுக்குக் கிடைத்த தொடரான வெற்றிகள் என்பதனால் திருமறையில் இவ் இரு ஸூறாக்களும் அடுத்தடுத்து அமைந்திருப்பதும் அற்புதமாகும்.

ஸூறா பத்ஹ் ஹுதைபியா நிகழ்வைத் தொடர்ந்து இறங்கிய ஸூறா ஆதலால் ஹுதைபியா நிகழ்வு பற்றிய சுருக்கமான வரலாற்றுப் பார்வை ஆரம்பமாக அமைவது ஸூறாவை நன்கு புரிந்துகொள்ள உதவும்.

## ஹுதைபியா நிகழ்வு:

நபியவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றிருந்தாலும் அவர்களது உள்ளம் மக்காவைக் காணும் பொழுதை எதிர்பார்த்திருந்தது. மறுபக்கத்தில் புனித மாதங்களிலும் கூட முஸ்லிம்கள் மக்காவில் நுழைவதை மக்கத்துக் குறைஷிகள் எதிர்த்து நின்றார்கள். ஆயினும் மக்காவில் நபியவர்களும் அவர்களது சமூகமும் கால் பதிப்பது அல்லாஹ்வின் விருப்பமாகியது.

மதீனா, அப்போதுதான் பனூ முஸ்தலக் போரின் வடுவிலிருந்தும் ஆயிஷா (ரழி) அவர்களுக்கெதிரான அபாண்டம் ஏற்படுத்திய அதிர்வுகளிலிருந்தும் அமைதி கண்டிருந்தது. மதீனா இந்நிலையில் மற்றுமொரு வரலாற்றில் கால் பதிக்கத் தயாராகியது. நபியவர்களின் உம்ரா செல்லும் கனவும் மக்கா நோக்கிய பயணமுமே அந்நிகழ்வாகும்.

மதீனாவுக்கு பெரும் மன மகிழ்வை இப்பயணம் ஏற்படுத்தியிருந்தாலும் குறைஷியரின் தலையீட்டினால் அது இடைநடுவில் நின்று போனது. முஸ்லிம் படையணி மீதான குறைஷியரின் அச்சம் உம்ராக் கடமையை நிறைவேற்றுவதற்கு குறைஷிகள் தடை விதிக்கும் வரையில் உச்சம் கண்டது. ஈற்றில் இரு தரப்பு உடன்படிக்கைகளோடு முஸ்லிம்கள் மதீனாவுக்குத் திரும்பும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

- 10 வருட யுத்த நிறுத்தம்
- விரும்பியவர் விரும்பிய தரப்பில் இணை வதற்கான உரிமை உண்டு
- நபியவர்களின் தரப்பில் இருந்து தப்பி வந்தவர் திருப்பி அனுப்பப்பட மாட்டார். ஆனாலும் குறைஷிகளின் தரப்பிலிருந்து தப்பிச் சென்றோர் நபியிடமிருந்து மீள அனுப்பப்படுவார்.
- இவ் வருடம் உம்ரா செய்யாமல் திரும்பிச் செல்ல வேண்டும். எதிர்வரும் வருடம் கஃபாவைத் தரிசிக்கலாம். ஆயினும் போரா யுதங்கள் கொண்டு வரக் கூடாது.

ஆகிய அம்சங்களே கைச்சாத்திடப்பட்ட அம் சங்களாகும்.

இவ் உடன்படிக்கை முஸ்லிம்களுக்கு அதி ருப்தியை ஏற்படுத்தியது. உமர் (ரழி) அவர்கள் இறை தூதரிடம் ''உண்மையில் நீங்கள் இறை தூதர் தானா?'' என்று வினவும் அளவுக்கு களம் குழப்பம் கண்டது. ஆயினும் இந்நிகழ்வை முஸ்லிம்களுக்குக் கிடைத்த தெளிவான வெற்றி என அருள் மறை வசனம் பறைசாற்றியது. அப்போதே முஸ்லிம்கள் நபியவர்களின் சாணக் கியத்தைப் புரிந்துகொண்டார்கள். எனவே நபி யவர்களுடன் நடந்து கொண்ட தமது பிழையான அணுகுமுறையினால் கவலை கொண்டனர்.

அல் குர்ஆன் குறிப்பிட்டது போன்று அவ் உடன்படிக்கை மிகத் தெளிவான வெற்றியாகவே அமைந்தது. ஏனெனில், ஹுதைபியா உடன்படிக்கையின்போது முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை 1400 ஆகவிருந்து, அடுத்து வந்த 02 வருடங்களில் அவர்களது எண்ணிக்கை 10,000 ஐ எட்டியது. இவ் வெற்றி இன்னுமொரு வெற்றியை கொண்டு வந்தது. அதனை பத்ஹு மக்கா என வரலாறு பதிவு செய்திருக்கிறது.

### விளக்கவுரை

**01-07 வரையான வசனங்கள்:**

மதீனாவுக்குத் திரும்பும் வழியில் சுபசோப னத்தைச் சுமந்து கொண்டு இறங்கிய இந்த ஸூறாவில் மொத்தமாக 29 வசனங்கள் உள்ளன. இந்த ஸூறா முழுமையாக ஒரே முறையில் இறங் கியது.

''நபியே! நிச்சயமாக நாம் உமக்குத் தெளி வான வெற்றியை வழங்கினோம்'' என ஸூறா ஆரம்பிக்கிறது. அடுத்து வரும் 02- 05 வரையான வசனங்கள் முஃமின்களுக்கு வழங்கிய வெற்றி கள் யாவை என்பதைக் குறிப்பிடுகின்றன. இறை மன்னிப்பு, பூரணமான அருள், ஹிதாயத், இறை நிராகரிப்பாளர்களுடனான வெற்றி, சாந்தமடைந்த உள்ளங்கள் என முஸ்லிம் களுக்குக் கிடைத்த உண்மையான வெற்றிகளை அடுக்காகக் குறிப்பிடும் ஆரம்ப வசனங்களின் இறுதியில், இறுதி இலக்காக அமைந்த சுவனம் குறித்த சுபசோபனமும் இடம்பெறுகிறது.

இந்த ஸூறா அருளப்பட்டபோது ''பூமியி லுள்ள அனைத்து அம்சங்களை விடவும் என க்கு மிகவும் விருப்பமான ஒரு ஸூறா இறங்கி யுள்ளது என நபியவர்கள் கூறினார்கள். அப்போது தோழர்கள் உங்களுக்கு சுபசோபனம் உண்டாவதாக அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் உங்களுக்கு தரும் கூலியைத் தெளிவுபடுத்தி விட்டான். எங்களுக்கு என்ன கூலி தருவான்?'' எனக் கேட்டார்கள். அப்போது முஃமின்களுக்கு சுவ னத்தை வாக்களித்து அல்லாஹ் அடுத்த வசனத்தை இறக்கியருளினான். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம், திர்மிதி, ஹாகிம்)

06 ஆவது வசனம் முஃமின்களுக்கு என்றும் சவாலாக அமைகின்ற முனாபிக்குகளுக்குக் கிடைத்த வெற்றிகளைக் குறிப்பிடுகின்றன. முதலில் இறை வேதனை அவர்களுக்கு விதி யாகிறது. இந்த வேதனைக்குள்ளாகும் இணை வைப்பாளர்களையும் அடுத்துக் குறிப்பிடும் இந்த ஸூறா இருவரையும் சமனாகப் பார்க்கி றது. மட்டுமன்றி முனாபிக்குகளையே முதலில் குறிப்பிட்டிருப்பதும் பாரதூரத்தை உணர்த்து கிறது.

மேலும், சோதனைகள் சக்கரமாகச் சுழன்று வருவதும் இறை கோபம், இறை சாபம் அவர் கள் மீது விதியாவதும் அவர்களுக்காக நரகம் தயார் நிலையில் இருப்பதுமே அவர்களுக்குக்

கிடைத்த வெற்றிகளாகும். அத்தோடு 07 ஆவது வசனம் வானங்கள் பூமியில் அல்லாஹ்வின் படையணிகள் இருப்பதாகக் குறிப்பிடுவது அவர்களுக்கு நிம்மதியற்ற வாழ்வைச் சுப சோனம் சொல்வது போல அமைகிறது.

08-10 வரையான வசனங்கள்:

முஸ்லிம்கள் இடை மறிக்கப்பட்டபோது முஸ்லிம்கள் சார்பாக குறைஷிகளிடம் பேசச் சென்ற உஸ்மான்(ரழி) அவர்கள் கொலை செய்யப்பட்டதாக வெளியான செய்தியைத் தொடர்ந்து நபியவர்கள் போராடுவதற்கான சத்தியப் பிரமாணத்தை தோழர்களிடம் பெற்றுக் கொண்டார்கள். இது ஸும்ரா என்ற மரத்தின் கீழ் இடம்பெற்றது. பைஅதுர் ரிழ்வான் (இறை திருப்தியைப் பெற்ற சத்தியப் பிரமானம்) என இது அழைக்கப்படுகிறது.


மரணத்துக்கும் தயாரான நிலையைக் கொண்ட நபித் தோழர்களைப் பொருந்திக் கொண்ட அல்லலாஹ் அச் சத்தியப் பிரமாணத்தில் நேரடியாக இணைந்து கொள்வது போலக் குறிப்பிடுகிறான். அல்லாஹ்வின் கரம் அவர்களின் கரத்தின் மீது இருப்பதாகக் கூறும் வசனத்தில் இக் கருத்துப் பிரதிபலிப்பதைக் காணலாம்.

11-16 வரையான வசனங்கள்:

உயிருக்குப் பயந்து இப் பயணத்தில் கலந்து கொள்ளாது மதீனாவில் தங்கிவிட்ட நாட்டுப் புற அறபிகள் போலி நியாயங்களைக் கூறி தங்களை நியாயப்படுத்தினார்கள். தாம் சமுகமளிக்காமைக்கு பாவமன்னிப்புக்காகப் பிரார்த்திக்குமாறு கோரினர். இவ்வார்த்தைகள் வெறும் பசப்பு வார்த்தைகளாகவே அமைந்தன. அவர்கள் இப் பயணத்தில் கலந்து கொள்ளாமைக்கான காரணம் முஃமின்கள் மதீனாவுக்குத் திரும்பவும் வரக்கூடாது, அவ்வாறு வருவது அசாத்தியம் என்ற எதிர்பார்ப்பு அவர்களின் உள்ளங்களில் ஷைத்தான்யமாகக் குடி கொண்டிருந்தமையாகும். ஆயினும் குறைஷிகளுடன் உடன்படிக்கையை வெற்றிகரமாக முடித்துவிட்டு முஸ்லிம்கள் திரும்பியபோது கனீமத்தில் பங்கு கேட்பதற்கு விரைந்து வந்தனர். இவர்களின் குறுகிய மனப்பாங்கை ஸூறா அம்பலப்படுத்துகிறது.

உயிரின் மீதான ஆசை இவர்களைத் தடுத்தாலும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வரும் தீங்கொன்றையேனும் தடுப்பதற்கு யாரால் முடியும் என்று ஸூறா எச்சரிக்கிறது.

அசத்தியத்தின் கரம் ஓங்கும்போது, அவர்களின் சக்தி கனத்திடும்போது முஃமின்கள் பூண்டோடு அழிந்திடுவார்கள் என தீய சக்திகள் நினைக்கின்றன. இந்த சிந்தனையிலேயே முஸ்லிம் உலகை அவர்கள் இன்றளவிலும் துண்டாடுகிறார்கள். ஆனாலும் இறுதி வெற்றி முஃமின்களுக்குச் சொந்தமானது என்ற செய்தியை வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்ள அவர்கள் தவறிவிடுகிறார்கள். இந்த சிந்தனையில் ஸூறா குறிப்பிடும் நாட்டுப் புற அறபிகளும் தற்கால எதிரிகளும் சமமானவர்களே என்பதை உணர்த்தி நிற்கிறது.



**அசத்தியத்தின் கரம் ஓங்கும்போது, அவர்களின் சக்தி கனத்திடும்போது முஃமின்கள் பூண்டோடு அழிந்திடுவார்கள் என தீய சக்திகள் நினைக்கின்றன. இந்த சிந்தனையிலேயே முஸ்லிம் உலகை அவர்கள் இன்றளவிலும் துண்டாடு கிறார்கள். ஆனாலும் இறுதி வெற்றி முஃமின்களுக்குச் சொந்தமானது என்ற செய்தியை வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்ள அவர்கள் தவறிவிடுகிறார்கள். இந்த சிந்தனையில் ஸூறா குறிப்பிடும் நாட்டுப் புற அறபிகளும் தற்கால எதிரிகளும் சமமானவர்களே என்பதை உணர்த்தி நிற்கிறது.**

இருப்பினும் அவர்களை மன்னிக்கத் தயாராகவே இருப்பதாக அல்லாஹ் குறிப்பிடுகிறான். இறை மார்க்கத்தின் வெற்றிக்காக முஃமின்களோடு கைகோர்க்கத் தயாராகினால் அவர்களுக்கு இப் பாக்கியம் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை. எனவே தான் ஹுதைபியாவைத் தொடர்ந்து ஹி- 07 இல் இடம் பெற்ற ஹைபர் போரில் கலந்து கொள்ளுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. போரில் கலந்து கொண்டாலே கனீமத்தில் பங்கிருக்கிறது என்றும் நிபந்தனை இடப்பட்டது. ஆயினும் இறைபாதையில் போராடும் வேளையில் இவர்களது நோக்கம் உலக இலாபமாகவே இருந்தது. ஆதலால், உலக இலாபம் கொண்டவர்களால் இம் மார்க்கம் வளர்வதில்லை எனக் கூறி அவர்களுக்குத் தடை விதிக்கப்படுகிறது. ஆயினும் உடல் நிலைக் குறைபாடு போராட்டத்தில் கலந்து கொள்வதற்குத் தடையாக அமைவதை அல்லாஹ் இயல்பாகவே அனுமதித்தாலும் மனோநிலைக் குறைபாடு தடையாக அமைவதை ஏற்றுக் கொள்வதில்லை என்றும் ஸூறா குறிப்பிடுகிறது.

18-29 வரையான வசனங்கள்:

இப்பகுதி நபியவர்களுடன் ஸஹாபாக்கள் செய்த பைஅத் பற்றிப் பேசுகிறது. அல்லாஹ்வுக்காக தங்கள் உயிரையும் வழங்கத் தயாராகிய அத் தருணம் அல்லாஹ்வின் திருப்தியையும், உளச் சாந்தத்தையும், நெருக்கமான வெற்றியையும் பிரதியீடாகப் பெற்றுக் கொடுத்தது. அல்லாஹ்வைச் சார்ந்திருக்கும் சமூகமொன்றுக்கே இவ் அனைத்து வெற்றிகளும் ஒரே பொழுதில் சாத்தியமாகும். மட்டுமன்றி கனீமத்துகளும் முஃமின்களுக்குக் கிடைப்பதாக அல்லாஹ் வாக்களிக்கிறான். இதற்கிடையில் ஹுதைபியாவின் போது காபிர்கள் சிலர் மலையடிவாரங்களூடே முஃமின்களைத் தாக்க முற்பட்டனர். ஆயினும் முஃமின்கள் அவர்களைக் கைது செய்து நபியவர்களுக்கு முன் நிறுத்தினர். கருணையின் வடிவான நபியவர்கள் அவர்களை மன்னித்தார்.

இங்கு அல்லாஹ் 'கிட்டிய வெற்றி' என்று குறிப்பிடுவது எதனை என்று தப்ஸீர் ஆசிரியர்கள் பல கருத்துக்களைக் குறிப்பிடுகின்றனர். ஹைபர் போராட்டம், மக்கா வெற்றி, கனீமத்கள் ஆகியனவே ஹுதைபியா உடன்படிக்கையைத் தொடர்ந்து கிட்டிய வெற்றிகளாகும். அல்லாஹ் இந்த ஸூறாவில் குறிப்பிடுவது மக்கா வெற்றியைத்தான் என்பதுவே மிகச் சரியான கருத்தாகும்.

20-24 வரையான பகுதி காபிர்கள் புற முதுகு காட்டி ஓடியதாகச் சொல்கிறது. வெற்றி வாகை சூடியோர் முஃமின்களாவார்கள் என்றும் கூறுகிறது. காபிர்களது தோல்வியும் முஃமின்களது வெற்றியும் எதேச்சையான நிகழ்வல்ல. அது

அல்லாஹ் இவ் உலகில் ஏற்படுத்தியிருக்கும் இறை நியதியாகும். நிச்சயமாக இறுதி வெற்றி முஃமின்களுக்குரியதாகும் என இவ் வசனங்கள் பிரகடனம் செய்கின்றன.

25-26ம் வசனங்கள் ஜாஹிலிய்ய மக்களின் ஜாஹிலிய்ய மமதை குறித்துப் பேசுகின்றன. புனித மாதங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது அறபுகளிடத்தில் பெரும் இழி செயலாகக் காணப்பட்ட போதிலும் நபியவர்களையும் அவர்களது தோழர்களையும் மக்காவில் நுழைவதை அவர்கள் தடுத்தமையானது நபியவர்களது கொள்கையின் மீது அவர்களுக்கிருந்த காழ்ப்புணர்ச்சியை உணர்த்துகின்றன.

27-28ம் வசனங்கள் நபியவர்களின் கனவு காற்றோடு கலைந்து விடாது அடுத்த 02 வருடங்களில் சாத்தியமானதாகக் கூறுகின்றன. இரத்தம் சிந்தாத புரட்சியை நபியவர்கள் நிலை நாட்டியபோது காபிர்களின் தலைவர்கள் இதனைக் காணச் சகிக்காது தங்கள் இல்லங்களுக்குள்ளே சென்றுவிட்டனர். வெற்றிக் கொடியுடன் நபியவர்கள் மக்காவில் கால் பதித்த இந்நிகழ்வே மக்கா வெற்றி எனப்படுகிறது. நபியவர்களின் இச் சாதனையைக் கண்டு வியக்காத உள்ளம் இருக்க முடியாது. இதனையே அல்லாஹுதஆலா ''அனைத்துக் கொள்கையையும் மிகைக்கும் மார்க்கம்'' என வர்ணித்திருக்கிறான்.

இறுதிப் பகுதி (29 வது வசனம்):

''முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர்'' என்று வசனம் ஆரம்பிக்கிறது. நபியவர்களை அச்சாணியாகக் கொண்டு சுழலும் அவர்களின் தோழர்களின் பண்புகள் பற்றி அடுத்து வரும் வசனங்கள் பேசுகின்றன. முஃமின்களின் எதிரிகளாக இறை நிராகரிப்பாளர்கள் மாறும் போது முஃமின்களின் நிலைப்பாடும் கடுமையானதாக மாறும் என்று கூறும் அல்குர்ஆன் இந் நிலைப்பாட்டில் பெற்றார் பாசம், சகோதர பாசம், உற்றார் பாசம் என்று எப் பாசமும் தளர்வை ஏற்படுத்தாது என்றும் கூறுகிறது. காபிர்களுடன் கைகோர்க்கும் எவரும் முஃமின்களின் பார்வையில் சமமானவர்களே ஆவர்.

ஆல்குர்ஆன் குறிப்பிடும் பண்புகளில் அடுத்ததாக முஃமின்களின் இறைவனுக்குப் பணிந்து வழிபடும் பண்பு இடம்பெறுகிறது. ருகூஉவிலும், ஸுஜூதிலும் சிரம் தாழ்த்தியவர்களாக உள்ளம் பணிந்தவர்களாக அவர்கள் காணப்படுவார்கள். அல்லாஹ்வின் அருளையும் திருப்தியையும் பெற்றுக் கொள்வதே அவர்களது வாழ்வின் இலக்காக விளங்குகிறது. தௌறாத், இன்ஜீல் ஆகிய வேதங்களில் இப் பண்பு கொண்டவர்கள் பற்றி சிலாகிக்கப் பட்டிருப்பதாக இவ் வசனங்கள் குறிப்பிடுகின்றன. இவர்கள் அனைவரும் பலமான மரம் ஒன்றுக்கு ஒப்பானவர்கள். அம் மரத்திலே புதிதாகத் தோன்றும் கிளையும் அம் மரத்துக்குப் பலம் சேர்ப்பதாகவே அமைகிறது. அது போலவே முன்னைய வேதங்களும் இறுதி மார்க்கம் இஸ்லாமும் விளங்குகிறது. முன்னைய வேதங்கள் மேலும் பலம் பெறுவதற்கு அதற்குப் புதிய உணவுகளை உற்பத்தி செய்யும் கிளையாகவே இஸ்லாம் விளங்குகிறது. அக் கிளையை வெட்டிவிட நினைப்பது மிகப் பெரும் அநியாயமாகும்.

ஆயினும் இம் மரத்தின் செழிப்பைக் கண்டு கயவர்கள் கோபமுறுகிறார்கள். அல்லாஹு தஆலா தௌறாத், இன்ஜீல், புர்கான் ஆகியன இணைந்தே இறை நிராகரிப்பாளர்களை எதிர் கொள்ள வேண்டும் எனக் கூறி மூன்று பிரதான வேதங்களையும் ஒரு புள்ளியில் இணைப்பதுவும் இங்கு கவனிக்கத்தக்கது. ஆனால் இன்று தாய் மரமே கிளையை வெட்டி வீச முனைந்திருப்பது எத்தனை பாரிய அநியாயம் என்பது சிந்தனைக்குரிய அம்சமாகும்.

இந்த ஸூறாவின் இறுதி வசனங்கள் அல்லாஹு தஆலாவின் புறத்திலிருந்து முஃமின்களுக்குக் கிடைக்கும் இரு அருள்களைக் குறிப்பிடுகின்றன. ஒன்று அல்லாஹ்வின் புறத்திலிருந்து கிடைக்கும் பாவ மன்னிப்பு. அடுத்தது அல்லாஹ்வின் கூலி. இவை இரண்டும் அல்லாஹ் வாக்களித்திருக்கும் அம்சங்களாகும். இந்த வாக்குடன் ஸூறா நிறைவுக்கு வருகிறது.

# மென்மையான உள்ளங்கள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
''அல்லாஹ் மென்மையானவன், மிருதுவானவன்,
அவன் மென்மையாகவும் மிருதுவாகவும்
நடந்துகொள்வதனையே விரும்புகின்றான்.
கடினமான பண்பினூடாக சாதிக்க முடியாதவற்றை
மிருதுவான பண்பினூடாக சாதிப்பதற்கான
வாய்ப்புக்களையும் அதிகம் வழங்குகின்றான்''



**கலாநிதி எச்.எல்.எம். ஹாரிஸ்**
சிரேஷ்ட விரிவுரையாளர், ஜாமிஆ நளீமிய்யா
haris_sl@yahoo.com

அனஸ் இப்னு மாலிக் (றழி) அவர்கள் அறிவிக்கும் இந்நபி மொழியை இமாம் முஸ்லிம் தனது ஸஹீஹ் கிரந்தத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

''அல்லாஹ் மென்மையானவன், மிருதுவானவன். அனைத்து காரியங்களிலும் மென்மையாகவும் மிருதுவாகவும் நடந்துகொள்வதனையே விரும்புகின்றான்.''

ஆயிஷா (றழி) அவர்களினூடாக அறிவிப்புச் செய்யப்பட்ட இவ்வறிவிப்பை இமாம்களான புஹாரி, முஸ்லிம் ஆகியோர் தமது கிரந்தங்களில் பதிவு செய்துள்ளனர்.

'ரிப்க்' என்ற அறபுச் சொற்பிரயோகம் மென்மை, மிருதுவான தன்மை என்ற கருத்தைக் கொடுக்கும். மனிதன் தனது வார்த்தைப் பிரயோகங்களில் அன்றாட சமூக செயற்பாடுகளில் மென்மையாகவும் (Softness) மிருதுவாகவும் நடந்துகொள்ளல், வெறுப்புணர்வை ஏற்படுத்துகின்ற கடினபோக்கை முற்றாகத் தவிர்த்தல் அவசியம் என்ற கருத்தையே நாம் விளக்க எடுத்துக் கொண்ட மேற்குறித்த நபிமொழிகள் குறித்து நிற்கின்றன.

சமூக வாழ்வில் வெற்றி பெறுவதற்கான மிக அத்தியவசிய பண்புகளில் ஒன்று மென்மை. எல்லோரும் பொதுவாக விரும்பப்படும் பண்

பாகும் உள்ளங்களை கவர்ந்து, ஈரித்தெடுக்கின்ற மிக முக்கிய பண்பாகும். கடின போக்கும், வரண்ட வார்த்தைப் பிரயோகங்களும் எப் போதும் மனித உள்ளங்கள் வெறுக்கும் பண்பு களாகும்.

ஒரு சாதாரண முஸ்லிம் தன்னோடு, தனது குடும்ப அங்கத்தவர்களோடு. சொந்த பந்தங்க ளோடு, நண்பர்களோடு, அயலவர்களோடும், முஸ்லிம் முஸ்லிமல்லாதவர்கள் -ஏன், எத்த கைய பாகுபாடுகளுமன்றி அனைத்து மனிதர் களுடனும், அதுமட்டுமன்றி மிருகம், பறவை கள் அனைத்து ஜீவராசிகளுடனும் மென்மை யாகவும் மிருதுவாகவும் நடந்து கொள்ள வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளான்.

ஒரு தாகித்த நாய்க்கு நீர் புகட்டி இளகிய மனதுடன் நடந்து கொண்ட மனிதன் சுவர்க்கம் சென்ற சம்பவமும், பசிக்கு உணவு கொடுக் காமலும் தாகத்துக்கு நீர் புகட்டாமலும் பூனை யொன்றைக் கட்டிவைத்து இறுகிய, கடின உள்ளத்துடன் நடந்து கொண்ட பெண் நரகம் சென்ற சம்பவமும் மேற்சொன்ன கருத்தினை அழகாகத் தெளிவுபடுத்துகின்றன.


மென்மை, நளினமான போக்கு என்ற பண்பு களுடன் நடந்துகொள்ளக் கிடைப்பது இறை யருளாகும். வாழ்க்கையில் முன்னேற அதிகம் துணைபுரியும் உயரிய பண்பாகும். பரக்கத் தினையும் அதிக சுபீட்சங்களையும் பெற்றுக் கொள்ளக் காரணமாக அமையும்.

கடின போக்கும், கடின சித்தம் கொண்ட உள்ளமும் பரகத் தடைப்படுவதற்கும், அதிக நன்மைகள் விளைவதனை தடுப்பதற்கும் காரணமாக அமையும். இக்கருத்தை பின்வரும் நபிமொழி தெளிவாகச் சொல்கிறது.

''யாருக்கு மென்மை, மிருதுவான தன்மை என்ற பண்புகள் கொடுக்கப்படவில்லையோ அவருக்கு அதிகமான நலவுகள் கிடைப்பதற் கான வாய்ப்புக்கள் தடைப்பட்டுவிட்டன''. (ஆதாரம் ஸஹீஹ் முஸ்லிம்)

மற்றொரு அறிவிப்பில் ''யாருக்கு மென்மை, நளின போக்கு என்ற பண்புகள் கிடைக்கப் பெறுகிறதோ. அவருக்கு உலக, மறுமை இரண் டினதும் நலவுகளில் கணிசமானதொரு பகுதி கொடுக்கப்பட்டு விட்டது. குடும்ப உறவைப் பேணவும், நல்ல உயர்ந்த பண்புகளுடன் அய லவர்களுடன் நடந்துகொள்ளவும், வீட்டில் அமைதியான வாழ்க்கையினை நடத்தவும், ஆயுள் அதிகரிக்கப்பட்ட பரகத் நிறைந்த வாழ் வொன்றினைப் பெற்றுக் கொள்ளவும் அப் பண்பு காரணமாக அமைகின்றது. (ஆதாரம் முஸ்னத் அஹ்மத்)

முகமலர்ச்சி, புன்முறுவல், இன்முகம் என்று பல சொற்பிரயோகங்களால் அடையாளப் படுத்தப்படுகின்ற, மனிதனுடைய அழகிய முக பாவம் மென்மை என்ற அந்த உயரிய பண்பின் வெளிப்பாடாகும். உள்ளங்களைக் கவர்வதில்



**முகமலர்ச்சி, புன்முறுவல், இன்முகம் என்று பல சொற்பிரயோகங்களால் அடையாளப் படுத்தப்படுகின்ற, மனிதனுடைய அழகிய முக பாவம் மென்மை என்ற அந்த உயரிய பண்பின் வெளிப்பாடாகும். ஒரு மனிதன் தனது தனிப் பட்ட, குடும்ப, சமூக, பொருளாதார வாழ்க்கை யின் அனைத்து கட்டங்களிலும் வெற்றிபெற இப்பண்பு மிகவும் இன்றியமையாதது.**

அதற்கு அபார சக்தியுண்டு. முரண்பாடுகளைத் தீர்ப்பதிலும், தூரப்பட்ட உள்ளங்களை பிணைப் பதிலும் கோபங்களைத் தணிப்பதிலும் இடை வெளிகளைக் குறைப்பதிலும் பெரும் பங்காற் றுகின்றது. எனவே ஒரு மனிதன் தனது தனிப் பட்ட, குடும்ப, சமூக, பொருளாதார வாழ்க்கை யின் அனைத்து கட்டங்களிலும் வெற்றிபெற இப்பண்பு மிகவும் இன்றியமையாதது.

ஆனால் ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை யில் அல்லாஹ்வின் தூதை சுமந்தவன் என்ற வகையில் இப்பண்பின் அவசியம் மிகவும் அதிகமாக உணரப்படுகின்றது. ஒரு முஸ்லிம் தான் ஏற்று பின்பற்று வாழ்கின்ற தூதினை அடுத்த மனிதர்களுக்கு சொல்ல வேண்டிய கடப்பாடு அவனுக்கு உண்டு. அந்தவகையில் அப்பணியை செவ்வனே செய்வதற்கு அவன் மிகவும் மென்மையாகவும் மிருதுவாகவும் நடந்து கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு உட்படுகின்றான்.

நபி (ஸல்) அவர்கள் தனது பிரச்சார பணியில் முழுமையான வெற்றியை பெற்றுக்கொள்வ தற்கும், தனது பரம எதிரிகள் கூட இஸ்லாத் தின் பால் கவரப்படுவதற்கும் அவரிடம் காணப் பட்ட மென்மை, மிருதுவான தன்மைதான் மிக முக்கிய காரணம் என்பதை பின்வரும் அல்குர் ஆனிய வசனம் எமக்கு உணர்த்துகின்றது.

''அல்லாஹ்வின் அருளினாலேயே நபியே நீங்கள் அவர்களுடன் மென்மையாகவும், மிருது வாகவும் நடந்துகொண்டீர்கள். நீங்கள் கடுமை யாகவும், கடின சித்தம் கொண்ட உள்ளமுடை யவராகவும் இருந்திருப்பீர்களானால் அவர்கள் உங்களை விட்டு விரண்டோடியிருப்பார்கள்.'' *(ஆல இம்ரான்: 159)*

Soft Skills என்பது தஃவாவில் ஈடுபடுகின்ற வர்களுக்கு இருக்க வேண்டிய முக்கிய தகைமை களாகும். ஒரு பிரச்சாரகன் இப்பண்புகளை அணிகலன்களாக எடுக்கின்றபோது தன்னால் அழைக்கப்படுகின்றவர்கள் தனது சிந்தனை களையும், கொள்கையினையும் ஏற்றுக்கொள் ளாதபோதும் குறைந்தபட்சம் எதிரிகளாகச் செயற்படுவதிலிருந்து அவர்களைத் தடுத்து விடும். எனவே இப்பண்புகள் தஃவாவின் அடிப்படைத் தேவையாகும். இது குறித்து இமாம் சுப்யானுஸ் ஸவ்ரி பின்வருமாறு குறிப் பிடுகின்றார்கள்.

''நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பண்பில் பின்வரும் மூன்று பண்புகளும் காணப் படுகின்றவர்களே ஈடுபடல் வேண்டும். தான் ஏவுகின்ற அல்லது தடுக்கின்ற விடயங்களில் மென்மையாக நடந்து கொள்ளல், தனது ஏவல் களிலும் விலக்கல்களிலும் நீதமாக செயற்படு தல், தான் ஏவுகின்றவை தொடர்பாகவும் தடுக் கின்ற விடயங்கள் தொடர்பாகவும் போதிய அறி வினையும் தெளிவினையும் பெற்றிருத்தல்.''

தஃவாப் பணியில் முழு மூச்சுடன் ஈடுபட்ட நபியவர்கள் ஒரு சில விதி விலக்கான சந்தர்ப்

பங்கள் தவிர, எல்லா சந்தர்ப்ப சூழ்நிலை களிலும் மென்மையாகவும் மிருதுவாகவுமே நடந்துகொண்டுள்ளார்கள். இது குறித்து பல் வேறுபட்ட ஸஹீஹான அறிவிப்புக்கள் எம்மை வந்தடைந்துள்ளன.

தனது வீட்டு நிலைமை குறித்து அன்னை ஆயிஷா (றழி) அவர்கள் பின்வருமாறு கூறினார் கள்: ''அல்லாஹ்வின் தூதர் ஒருபோதும் தனது பொற் கரங்களினால் எந்தவொன்றையும் அடி த்ததில்லை. எந்தவொரு பெண்ணையோ, பணி யாளனையோ அடித்ததில்லை. அல்லாஹ்வின் பாதையில் போராடும் சந்தர்ப்பங்களைத் தவிர.'' (ஆதாரம் ஸஹீஹ் முஸ்லிம்)

பத்து வருடங்கள் நபியவர்களுக்கு பணி புரிந்த அவரது பணியாளன் அனஸ் இப்னு மாலிக் (றழி) பின்வருமாறு கூறுகின்றார்கள்: ''நான் நபியவர்களுக்கு பத்து வருடங்கள் பணி செய்தேன். அவர் என்னுடன் ஒருபோதும் கடிந்து கொண்டது கிடையாது. நான் செய்த ஒன்றைப் பார்த்து ஏன் நீர் இதனைச் செய்தாய் என்றோ, அல்லது செய்யாமல் விட்ட ஒன்றைப் பார்த்து ஏன் செய்யவில்லை என்றோ கடுமை யான தொனியில் கேட்டது கிடையாது.''

தன்னோடு கரடுமுரடாக நடந்து கொண்ட மனிதர்களுடன்கூட நபியவர்கள் மிருதுவாகவும் மென்மையாகவும் நடந்துகொண்டார்கள். இத ற்கு பின்வரும் சம்பவம் சிறந்த உதாரணமாகும்.

அனஸ் (றழி) கூறுகின்றார்கள்: ''நான் ஒரு முறை நபியவர்களுடன் ஒரு பயணத்தில் ஈடு பட்டிருந்தேன். நஜ்ரான் பிரதேசத்தில் நெய்யப் பட்ட சொரசொரப்பானதொரு துணியை நபி யவர்கள் தனது தோற் புயத்தில் போட்டிருந் தார்கள். இடைநடுவே ஒரு காட்டரபி குறுக் கிட்டு நபியவர்களின் தோளிலிருந்த துணியை கடுமையாக இழுக்க, அது அவரது தோற் புயத்தில் கடுமையான பாதிப்பினை ஏற்படுத்தி விட்டது. பின்னர் அக்காட்டரபி நபியர்களை நோக்கி ''முஹம்மதே, உம்மிடமுள்ள அல் லாஹ்வின் செல்வங்களில் ஒரு பகுதியை எனக்கு தந்துவிடுமாறு ஏவிவிடும்'' என்றான். அவனைத் திரும்பிப் பார்த்த நபியவர்கள் சிரித்துவிட்டு அவனுக்கு கொடை கொடுக்கு மாறு பணித்தார்கள். (ஆதாரம் ஸஹீஹ் புகாரி, முஸ்லிம்)


தனது புனித மேனியில் பாதிப்பை ஏற் படுத்துமளவுக்கு கடுமையாக நடந்துகொண்ட அக்காட்டரபியுடனும் நபியவர்கள் கோபப்பட வோ, கரடுமுரடாக நடந்துகொள்ளவோ முன் வரவில்லை. மாறாக, சிரித்துவிட்டு கொடையும் கொடுத்தனுப்பினார்கள். நபியவர்கள் எந்தள வுக்கு மிருதுவாகவும் மென்மையாகவும் நடந்து கொண்டுள்ளார்கள் என்பதற்கு இச்சம்பவம் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

நன்மைகளை ஏவுகின்ற போதும், தீமையான காரியங்களைத் தடுக்கும் போதும் நபியவர்கள் நிதானம் தவறவில்லை. மென்மையாக அணுகி னார்கள். இதற்கு பின்வரும் சம்பவம் சிறந்த உதாரணமாகும்.

ஒரு முறை நபியவர்களும் மூத்த ஸஹாபாக் களும் மஸ்ஜிதுன் நபவியில் அமர்நதிருந்தார்கள். அப்போது அங்கு வந்த ஒரு வயது முதிர்ந்த நாட்டுப்புற அரபி, தனது ஆடைகளை உயர்த்தி புனித மஸ்ஜிதின் ஒரு மூலையில் சிறுநீர் கழிக்க ஆரம்பித்தார். இதனைக் கண்ணுற்ற ஸஹாபாக் கள் கடும் கோபமடைந்தனர். அவரைத் தாக்க முற்பட்டனர். ஆனால் நபியவர்களோ நிதானம் இழக்கவில்லை. கோபப்படவில்லை. ஸஹா பாக்களை நோக்கி ''நீங்கள் அவரை விட்டு விடுங்கள். அவரது தேவையை எவர் பூர்த்தி செய்யட்டும். நீங்கள் இலகுபடுத்துகின்றவர் களாக அனுப்பப்பட்டுள்ளீர்கள். கஷ்டப்படுத்து கின்றவர்களாக அனுப்பப்படவில்லை.''

குறித்த மனிதர் சிறுநீர் கழித்து முடிந்ததும் ஸஹாபாக்களைப் பார்த்து ''தற்போது நீர் கொண்டு அவ்விடத்தில் ஊற்றிவிடுங்கள்'' என் றார். அதே போன்று நாட்டுப்புற அரபியை அழைத்து ''இவ்விடம் புனிதமானது. அசுத்த மான விடயங்களுக்குரிய இடமன்று. அல்லாஹ் வை ஞாபகமூட்டுவதற்கான இடம். எனவே, இதுபோன்ற அசிங்கங்களில் ஈடுபட வேண் டாம்'' எனக் கூறி அனுப்பிவைத்தார்கள்.

மஸ்ஜிதுன் நபவியில், நபியவர்களினதும் மூத்த ஸஹாபாக்களினதும் முன்னிலையில்



ஒரு வயது வந்த மனிதர் செய்த அத்தவறினை நபியவர்கள் அணுகிய முறை, மென்மையான போக்கு, கடின சித்தமற்ற உள்ளம். அனைவரையும் கவருகின்ற முன்மாதிரி.

தனது பரம எதிரிகளான யூதர்களுடன் மிகவும் மென்மையாக நடந்துகொண்ட மற்றொரு சம்பவத்தை ஆயிஷா (றழி) அறிவிக்கின்றார்கள். ''ஒருமுறை நபியவர்கள் வீட்டில் அமர்ந்திருந்தார்கள். அங்கு நபியவர்களைச் சந்திக்க ஒரு யூதர், நபியவர்களை நோக்கி ''அஸ்ஸாமு அலைக்கும்'' என்றார்கள். அதாவது ''உங்களுக்கு மரணம், அழிவு ஏற்படட்டும்'' என்றார்கள். இதனைப் புரிந்து கொண்ட நான் (ஆயிஷா) ''உங்களுக்கும் மரணமும் சாபமும் ஏற்படட்டும்'' என்றேன். இதனைச் செவியுற்ற நபியவர்கள், ''ஆயிஷாவே அவசரப்பட வேண்டாம் பொறுமையாக இருங்கள், நிச்சயமாக அல்லாஹ் அனைத்து விடயங்களிலும் மென்மையாகவும் மிருதுவாகவுமே நடந்துகொள்வதை விரும்புகின்றான்'' என்றார்கள். அதற்கு நான் ''அவர்கள் சொன்னதை நீங்கள் சரியாக செவிமடுக்கவில்லையா? என்றேன். அதற்கு நபியவர்கள்... ''உங்கள் மீதும்'' என்று பதிலளித்தனை அவதானிக்கவில்லையா'' என்று கூறினார்கள். (ஆதாரம் ஸஹீஹ் புகாரி, முஸ்லிம்)

சமூக வாழ்வில் மட்டுமன்றி அல்லாஹ்வுடன் தொடர்புபடுகின்ற இபாதத்களில் ஈடுபடுகின்ற போதும் மக்களுக்கு கஷ்டமோ சங்கடங்களோ ஏற்படாமல் மிகவும் நிதானமாக நபியவர்கள் செயற்பட்டுள்ளார்கள். இலகுபடுத்துதல், மென்மையாக நடந்து கொள்ளுதல் என்பது நபியவர்களிடம் மிகைத்த பண்பாகக் காணப்பட்டு வந்துள்ளது. அதனை நபியவர்கள் பின்வருமாறு விளக்குகின்றார்கள்.

''நான் நீண்ட நேரம் நின்று தொழ விரும்பி தொழுகையில் நுழைகின்றேன். ஆனால் சிறு குழந்தைகளின் அழுகுரல் கேட்டு, குறித்த குழந்தைகளின் தாய்மார்கள் நோவினைப்படக் கூடாது என்பதற்காக தொழுகையை சுருக்கி அவசரமாக முடித்துக்கொள்வேன்.''

எல்லாச் சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் மென்மையாகவும் மிருதுவாகவும் நடந்துகொண்ட நபியவர்கள் ஒரு சில முக்கியமான சந்தர்ப்பங்களில் மட்டும் கடுமையாகயும், கண்டிப்புடனும் நடந்துகொண்டுள்ளார்கள். போராட்டங்களில் இஸ்லாத்தின் எதிரிகளைச் சந்திக்கும் வேளை, ஹுதூத் எனும் இஸ்லாமிய தண்டனைகளை நிறைவேற்றும்போது, தனது மனைவிமார்களை நெறிப்படுத்தி, வழிபடுத்த முற்படுகின்ற சந்தர்ப்பங்கள், பெருமை போன்ற மிக மோசமான பண்புகளைக் காண்கின்ற வேளை போன்ற குறிப்பான சில சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டலாம்.

எனவே ஒரு முஸ்லிம் தனிப்பட்ட வாழ்விலும் பொதுவாழ்விலும் வெற்றி பெற, நாம் விளக்க எடுத்துக்கொண்ட நபிமொழி குறிக்கும் மென்மை (Softness) என்ற பண்பு மிகவும் அவசியமானது. எனவே குறிப்பாக தஃவாவில் சாதிக்க விரும்புகின்ற சகோதர சகோதரிகள் இப்பண்பு குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும். இப்பண்புடன் வாழ்ந்து தனிப்பட்ட வாழ்விலும் தஃவா வாழ்விலும் வெற்றி பெற்ற நல்லடியார்களின் கூட்டத்தில் அல்லாஹ் எம்மனைவரையும் சேர்த்தருள்வானாக, ஆமீன்.

# வஸதிய்யா எனும் நடு நிலை
# ஒரு சமூக எழுச்சிப் பாதை


வஸதிய்யா என்பது இன்றைய தஃவாக் களத்தின் ஆகர்ஷணமிக்க ஒரு சொற்பிரயோகம், எல்லோரும் பயன்படுத்துகின்ற ஒரு சொற்பிர யோகம் மாத்திரமன்றி பல்வேறு சமூகப் பிரச்சினைகளின்போது தீர்வாக அமைந்த ஒரு நிலைப்பாடாகவும் இது காணப்படுகிறது. பல சமயங்களில் நடுநிலைவாதிகள் அல்லது நடுநிலை தஃவாக்கள் விமர்சிக் கப்படுவதை நாம் அவதானிக்கிறோம்.

அந்த விமர்சனங்களில் மறைந்து நிற்கும் ஆதங்கங்களைப் பார்க்கின்ற பொழுது, அவர்கள் மிகப் பெரும்பாலும் வஸதிய்யா அல்லது நடுநிலை என்பதை ஒரு சூழ்நிலையை சமாளிப்பதற்கான பொறிமுறையாகப் புரிந்து கொண்டி ருப்பதைக் காணலாம். அல்லது வஸதிய்யா வைப் பிரயோகிப்பவர்களும் சில சமயங்களில் ஒரு சமாளிப்புப் பொறிமுறையாக மாத்திரம் வஸதிய்யாவைக் கையாள்வதைக் காணலாம்.

இது வஸதிய்யா குறித்த எதிர் மனப்பான்மை ஒன்று கட்டியெழுப்பப்பட காரணமாக அமைய முடியும். உண்மையில் வஸதிய்யா என்பதன் கோட்பாட்டுப் பொருள், சிலர் ஊடாக நடைபெறும் அதன் பிரயோகத் தவறுகளுக்கு அப்பாற்பட்டது. வஸதிய்யா என்பது இஸ்லாத்தின் ஓர் உயிர்ப் பெறுமானம் சமூக எழுச்சியின் மையம் என்பது புரிந்து கொள்ளப்படல் வேண்டும். அந்தவகையில் வஸதிய்யா எனும் நடு நிலை என்பதன் பிரதானமான கருத்துக்கள் குறித்து இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

வஸதிய்யா எனும் அறபுப்பதம் குறிக்கும் மொழி ரீதியான பரிபாஷை ரீதியான கருத்துக்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது ஐந்து பிரதானமான கருத்துக்களில் வஸதிய்யா என் பது பயன்படுத்தப் படுகிறது.

முதலாவது இரண்டு விடயங்களுக்கு நடுவில் இருக்கின்ற ஒன்று, அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பல விடயங்களுக்கு நடுவில் இருக்கின்ற ஒன்று என்ற கருத்தில் மொழியில் வஸதிய்யா என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இங்கு நடுவில் இருத்தல் என்பது பௌதீக ரீதியான இருத்தல், கருத்து ரீதியான இருத்தல் ஆகிய இரண்டையும் குறிக்கும்.



அஷ்ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்
mohakram2000@yahoo.co.uk

அல்குர்ஆன் கூறுகிறது, ''அவ்வாறே நாம் உங்களை மத்திம சமூகமாக அமைத்தோம். நீங் கள் மக்களுக்கு சாட்சியாளர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், ரஸூல் (ஸல்) அவர்கள் உங்களுக்கு சாட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகவும்'' *(பகரா - 143)*.

ஷஹீத் செய்யத் குத்ப் அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளிக்கும்போது, இந்த உம்மத் அதன் ஒழுங்கமைப்பு, சிந்தனை, உணர்வு, கொள்கை, நம்பிக்கை, தொடர்புகள், காலம், இடம் அனைத்திலும் மத்திம தன்மையைப் பேணுகிறது என்றார்.

இமாம் இப்னுல் அசீர் அவர்கள் இது குறித்துக் கூறுகையில் ''போற்றத்தக்க ஒவ்வொரு நல்ல பண்புக்கும் கண்டிக்கத்தக்க இரண்டு தீவிர நிலைகள் இருக்கின்றன. கொடை என்பது கஞ்சத்தனத்திற்கும் ஊதாரித்தனத்திற்கும் நடுவில் இருக்கும் பண்பாகும். துணிச்சல் என்பது கோழைத்தனத்திற்கும் அசட்டுத்தனத்திற்கும் மத்தியில் இருக்கும் பண்பாகும். கண்டிக்கத்தக்க பண்புகளைத் தவிர்ந்து வாழுமாறுதான் மனிதன் கேட்டுக் கொள்ளப்படுகிறான். கண்டிக்கத்தக்க பண்புகளை விட்டும் தூரமாகும் அளவுக்கு அவன் நடுநிலைப் பண்புக்கு நெருக்கமானவனாக இருப்பான்'' என்றார்கள்.

அல்குர்ஆன் இந்த சிந்தனையை மிகத் தெளிவாக வலியுறுத்துகிறது. ''அவர்கள் செலவு செய்யும்போது வீண்விரயம் செய்யவும் மாட்டார்கள். முற்றாகத் தவிர்ந்து கொள்ளவும் மாட்டார்கள். இவை இரண்டுக்கும் மத்தியில் சீராக நடந்து கொள்வார்கள்'' (புர்கான் 67) என்று அருளாளனின் அடியார்கள் குறித்து அல்குர்ஆன் கூறுகிறது.

மற்றோர் இடத்தில், ''உனது கைகளை கழுத்தை நோக்கிக் கட்டிக் கொள்ளவும் வேண்டாம். அவற்றை முழுமையாக விரித்து விடவும் வேண்டாம். அதனால் கண்டனமும் கைசேதமும் மாத்திரமே எஞ்சும்'' (இஸ்ராஃ - 29) என்றது.

எனவே வஸதிய்யா என்பதன் முதலாவது கருத்து இரண்டு கோணங்களைத் தவிர்த்து நடுவில் ஒரு நிலைப்பாட்டைக் கொள்ளுதல் என்பதாகும். நடுநிலை என்றவுடனேயே உடனடியாகப் புரிந்துகொள்கின்ற கருத்து இதுதான். மாத்திரமன்றி அதிகமானவர்களின் நடுநிலைப் பிரயோகங்களும் இந்த வடிவையே பிரதி பலித்து நிற்கின்றன.

இனி, வஸதிய்யா என்பதன் இரண்டாவது கருத்துக்கு வருவோம். வஸதிய்யா என்பது மிகவும் சிறந்தது மிகவும் உயர்ந்தது என்ற கருத்திலும் பயன்படுத்தப்படுகிறது. அறபு மொழியில் 'வஸத்' என்ற சொல் பரவலாக இந்தக் கருத்தில் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். ஏற்கனவே குறிப்பிடப்பட்ட ''நாம் உங்களை மத்திம சமூகமாக அமைத்தோம்'' என்ற வசனத்திற்கு இமாம் தபரி அவர்கள் விளக்கமளிக்கும்போது, ''வஸத் என்பது அறபு மொழியில் சிறந்தது என்ற கருத்தைத் தருகிறது. ஒருவரது பரம்பரையை உயர்ந்த பரம்பரை என்று குறிப்பிட விரும்பினால் அறபிகள் வஸத் என்ற சொல்லையே அதற்காகப் பயன்படுத்துவார்கள்'' என்று குறிப்பிடுகிறார்.

இந்தக் கருத்திலேயே நபியவர்கள் ''விடயங்களில் சிறந்தது மத்திமமானது'' என்றார்கள். இங்கு மத்திமம் என்பது உயர்ந்தது என்ற கருத்தையே தருகிறது. ஒரு தடவை கலாநிதி தாரிக் சுவைதான் அவர்கள், தனது பிரபல்யமான தொலைக்காட்சி நிகழ்ச்சியான ''வாழ்க்கை கற்றுத் தந்தவை'' என்ற நிகழ்ச்சியில் வஸதிய்யா என்ற கருத்தை விளங்கப்படுத்தும்போது ''வஸதிய்யா என்பதை சுருக்கமாகக் கூறினால் ஒரு விடயம் இரு ஓரங்களுக்கு நடுவில் இருக்கும். அதேவேளை அது உயர்ந்ததாகவும் காணப்படுவதையே வஸதிய்யா என்போம்.

உதாரணமாக மத்தியில் உள்ள மலை என்று நாம் கூறும்போது சூழவுள்ள மலைகளில் அதுவே உயர்ந்தது என்பதையே நாம் நாடுகின்றோம். அதுபோல் இஸ்லாம் ஒரு நடுநிலை மார்க்கம் என்று நாம் சொல்லும்போது, அது முரண்பட்ட பல கருத்தியல்களிடையே ஒரு மத்திய புள்ளி என்றே நாம் சொல்கிறோம். மத்திய புள்ளி எனும்போது ஒரு அபூர்வமான சமநிலையில் அது உயர்ந்து நிற்கிறது என்றே பொருள்படுகிறது'' என்று விளங்கப்படுத்துகிறார்.

இந்த அல்குர்ஆன் வசனங்களின் மூலம் இந்தக் கருத்தை ஓரளவுக்குப் புரிந்து கொள்ள முடிகிறது. ''இந்த அல்குர்ஆன் மிகச் சீரானதை நோக்கி வழிநடாத்துகிறது'' (இஸ்ரா- 9) எது

உலகில் மிகவும் சிறந்ததோ, மிகவும் உயர்ந்த தோ, மிகவும் சரியானதோ, அதனை நோக்கி யே அல்குர்ஆன் வழிகாட்டுகிறது.


''அவன்தான் தனது தூதுவரை நேர்வழியை யும் சத்திய மார்க்கத்தையும் கொடுத்து அனுப்பி வைத்தான். இணைவைப்பாளர்களுக்கு வெறுப் பாக அமைந்தாலும் கூட உலகின் எல்லா மார்க்கங்களையும் வெற்றி கொண்டதாக இந்த மார்க்கம் மாற வேண்டும்'' (தௌபா: 33) என்று அல்குர்ஆன் கூறுகிறது. இந்த மார்க்கம் நடு நிலையானது என்பது, அதுதான் உயர்ந்தது. அதுதான் வெற்றி பெற்றது. அதுதான் அனைத் தையும் மிகைத்து மேலெழுந்து நிற்கிறது என்று பொருள் கொள்ளப்படுகிறது.

எனவே, வஸதிய்யா என்பது பல விடய்ங் களுக்கு மத்தியில் ஒன்று மிகவும் சிறந்து உயர் ந்து காணப்படுகின்ற நிலையாகும். அந்தவகை யில் ஒரு உயர்ந்த சிறந்த தெரிவையே மத்திமம் என்போம். எது பயனுள்ளது? எது விளைவைத் தரவல்லது? எது பிறவற்றில் நின்றும் தனித் தன்மையுடன் வேறுபடுகிறது? எது உயர்ந்த கண்ணியத்தைப் பெற்றுத் தருகிறது? எது உள் ளத்தை அமைதி கொள்ளச் செய்கிறது? அதுவே வஸதிய்யா.

வஸதிய்யா என்பதன் மூன்றாம் கருத்துக்கு வருவோம். வஸதிய்யா என்பது ஸ்திரமாயிருத் தல் ஆழ்ந்து வேறூன்றியிருத்தல் என்ற கருத் தையும் குறிக்கிறது. வஸதிய்யா என்பதன் முத லாவது கருத்து இரண்டு ஓரங்களுக்கு நடுவில் காணப்படும் நடுநிலை என்று கூறினோம். அந்தவகையில் அங்கு ஓர நிலைப்பாடுகளைத் தவிர்த்து நடுவில் உள்ள நிலைப்பாட்டைக் கொள்ள வேண்டும் என்பதே எங்களிடத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கான காரணங்களில் ஒன்று என்னவெ னில், ஓர நிலைப்பாடுகள் என்றுமே ஸ்திரமற்ற வை, நிலையற்றவை உறுதியானவையல்ல. ஆனால் மத்திம நிலைப்பாடு ஸ்திரமானது. ஆழ்ந்து வேறூன்றியது, உறுதியானது.

இதனை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது. ''மனிதர்களில் சிலர் அல்லாஹ்வை ஓரத்தில் இருந்து வணங்குகின்றனர். (அதாவது உறுதி யற்ற நிலையில் வணங்குகின்றனர்) அவருக்கு ஒரு நன்மை நேர்ந்தால் திருப்தி கொள்வார். தீமை நேர்ந்தால் பழைய நிலைக்குத் திரும்பி விடுவார். இவர் உலகம் மறுமை இரண்டையும் இழந்து விட்டவர். இதுதான் மிகத் தெளிவான நஷ்டமாகும்'' (ஹஜ் - 11)



இந்த வசனத்திற்கு விளக்கமளிக்கும் சில இமாம்கள் ''அவர் திருப்தியற்ற நிலையில் அல்லாஹ்வை வணங்குகிறர். அது மார்க்கத்தில் ஒரு ஓரத்தில் இருப்பது போன்றதாகும். அவர் உறுதியாக மார்க்கத்தில் நுழைந்து கொள்ளவில்லை. அதனால்தான் ஒரு சிறிய தீங்கை காண்கின்ற போதே மார்க்கத்தை விட்டுச் சென்று விடுகிறார்'' என்றார்கள்.

இந்தக் கருத்தை வலுப்படுத்தும் வகையிலேயே இந்த வசனம் இறங்கியமைக்கான காரணமும் அமைந்திருக்கிறது. இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் கூறுகிறார்கள் ''ஒருவர் மதீனாவுக்கு வந்து இஸ்லாத்தைத் தழுவுகிறார். தனது மனைவி ஆண் பிள்ளையைப் பெற்றெடுத்தால் தனது குதிரை கன்றை ஈன்றால் இது நல்லதொரு மார்க்கம் என்பார்கள். இவ்வாறு நடக்காதபோது, இது மோசமானதொரு மார்க்கம் என்பார்கள். அப்போதுதான் இந்த வசனம் இறங்கியது'' என்றார்கள். (புஹாரி).

மேற்கூறப்பட்ட விளக்கங்களின் பின்புலத்தில் நின்று பார்க்கின்ற பொழுது, வஸதிய்யா என்பது ஆழ்ந்ததொரு அடிப்படை கோட்பாடு, ஒரு ஸ்திரமான வாழ்வொழுங்கு என்பதைப் புரிந்து கொள்ளலாம். மாற்றமாக அது ஒரு தற்காலிக அணுகுமுறையல்ல அல்லது ஒரு சமாளிப்புப் பொறிமுறையல்ல.


வஸதிய்யா என்பதன் நான்காவது கருத்து, நேரான பாதை என்பதாகும். அறபுமொழியில் இது ஸிராத் முஸ்தகீம் என்று வழங்கப்படுகிறது. ஸிராத் முஸ்தகீமைக் கடைபிடித்தல் என்பது இலக்கை நோக்கிய உறுதியான பயணம். இடையில் கிளைப்பாதைகளில் கவனத்தை சிதறவிடாதிருத்தல் என்பதாகும்.

ஸிராத் முஸ்தகீம் எனும் இந்த செயன்முறையையே வஸதிய்யா என்பதும் குறிக்கிறது. இங்கேயும் பல்வேறு கிளைப் பாதைகளைத் தவிர்த்து உறுதியான ஒரு பாதை தேர்ந்தெடுக்கப்படுகிறது. இதுதான் வஸதிய்யா.

அல்குர்ஆன் இந்தக் கருத்தை எவ்வாறு விளக்குகிறது என்பதைப் பாருங்கள்: ''இதுதான் எனது நேரான பாதை, இதனையே பின்பற்றுங்கள். வேறு பாதைகளைப் பின்பற்றாதீர்கள். அது உங்களை நேரான பாதையை விட்டும் திசை திருப்பி விடும். இதுதான் உங்களுக்கு சொல்லப்படும் உபதேசம். நீங்கள் தக்வா உள்ளவர்களாக மாற வேண்டும் என்பதற்காக'' (அன்ஆம் - 153)

**வஸதிய்யா என்பது பல விடயங் களுக்கு மத்தியில் ஒன்று மிகவும் சிறந்து உயர் ந்து காணப்படுகின்ற நிலையாகும். அந்தவகை யில் ஒரு உயர்ந்த சிறந்த தெரிவையே மத்திமம் என்போம். எது பயனுள்ளது? எது விளைவைத் தரவல்லது? எது பிறவற்றில் நின்றும் தனித் தன்மையுடன் வேறுபடுகிறது? எது உயர்ந்த கண்ணியத்தைப் பெற்றுத் தருகிறது? எது உள் ளத்தை அமைதி கொள்ளச் செய்கிறது? அதுவே வஸதிய்யா.**

இந்த அல்குர்ஆன் வசனத்தை ஒரு வரைபின் மூலம் நபியவர்கள் ஸஹாபாக்களுக்கு விளக்கப்படுத்திக் காட்டினார்கள். ஜாபிர் (ரழி) அவர்கள் கூறினார்கள்: ''நாங்கள் நபியவர்களுடன் இருந்தோம், அப்போது நபியவர்கள் நிலத்தில் ஒரு கோடு போட்டார்கள். அதன் வலப்புறமாகவும் இடப்புறமாகவும் இரண்டு கோடுகள் வீதம் வரைந்தார்கள். பின்னர் மத்தியில் உள்ள கோட்டின் மீது தனது கையை வைத்து, இது தான் அல்லாஹ்வின் பாதை என்று கூறிவிட்டு இந்த ஆயத்தை ஓதிக் காட்டினார்கள்'' என்றார்கள்.



எனவே, இங்கு அல்குர்ஆனினதும் நபியவர்களினதும் விளக்கத்தின் அடிப்படையில், கிளைப் பாதைகளைத் தவிர்த்து மத்திம பாதையில் பயணம் செய்வது ஸிராதுல் முஸ்தகீமைக் கடைபிடித்தல் என்று புரிந்து கொள்ளலாம். இதுதான் வஸதிய்யா என்பதன் மூலமும் நாடப்படுகிறது.

ஸிராதுல் முஸ்தகீம் என்பதுதான் வஸதிய்யா என்ற கருத்தை பிறிதோர் இடத்தில் அல்குர்ஆன் தனது வசனப் போக்கின் மூலம் தெளிவுபடுத்துகிறது. ஸூறதுல் பகராவின் 142 ஆவது வசனத்தை நிறைவு செய்யும்போது ''தான் நாடுபவர்களை ஸிராதுல் முஸ்தகீமின் பால் வழி நடாத்துகிறான்'' என்று கூறிவிட்டு, அடுத்த வசனத்தை இவ்வாறு ஆரம்பிக்கின்றான். ''அவ்வாறே உங்களை நாம் மத்திமமான சமூகமாக அமைத்தோம்'' என்கிறான்.

இந்தத் தொடரை நோக்கும் பொழுது அல்லாஹ்வின் ஸிராதுல் முஸ்தகீம் எனும் வாழ்க்கை வழிதான் வஸதிய்யா வாழ்வொழுங்கு, அந்தப் பாக்கியத்தை இந்த உம்மத்திற்குத்தான் அவன் வழங்கியிருக்கின்றான் என்ற கருத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது.

வஸதிய்யா என்பதன் ஐந்தாவது கருத்து நீதி என்பதாகும். இமாம் ராகிப் அல் இஸ்பஹான் அவர்கள் வஸதிய்யா என்ற சொல்லை வரைவிலக்கணப்படுத்துகின்ற பொழுது ''ஒரு விடயத்தின் நீதியான நிலை எதுவோ அதுதான் மத்திமம்'' என்றார்கள்.

அல்குர்ஆனின் ''நீங்கள் தஸ்பீஹ் செய்யக் கூடாதா என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? என்று அவர்களில் மத்திமமானவர் கூறினார்'' (கலம் - 28) என்ற வசனத்திற்கு இமாம் இப்னு கஸீர் அவர்கள் விளக்கமளிக்கும் போது, அவர்களில் மத்திமமானவர் என்பதன் கருத்து அவர்களில் நீதியானவர் என்ற விளக்கத்தை இப்னு அப்பாஸ் (றழி) அவர்களும் இன்னும் பலரும் குறிப்பிட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

பொதுவாக நீதி என்பது ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய அந்தஸ்தில் வைத்தல் என்று கூறுவார்கள். வஸதிய்யா என்பது நீதி என்று கூறும்போது, பௌதீக ரீதியாக நடுவில் இருக்கும் பொழுது மாத்திரம்தான் அங்கு வஸதிய்யா பேணப்படுகிறது என்று சொல்வதற்கில்லை. மாற்றமாக வஸதிய்யா என்பது நீதியான நிலைப்பாட்டைக் கொள்ளுதலாகும். இது பௌதீக ரீதியில் மத்தியிலன்றி வேறு வடிவிலும் காணப்பட முடியும்.

மேற்கூறப்பட்ட விளக்கங்களின் அடிப்படையில் நோக்கும்போது வஸதிய்யா என்பது பக்கச் சார்பின்றி நடுவில் அமைந்த ஒரு

நிலைப்பாடு, உயர்ந்து நிற்கும் சிறந்ததொரு தெரிவு, நிலையான ஒரு வாழ்வொழுங்கு, தடம் மாறாத இலக்கு நோக்கிய பயணம், ஒவ்வொன்றுக்கும் உரிய இடத்தை வழங்குதல் போன்ற அனைத்துக் கருத்துக்களும் பொதிந்த ஒரு கோட்பாட்டையே குறித்து நிற்கின்றது.

இதில் பொதிந்துள்ள ஒவ்வொரு பெறுமான மும் ஒரு சமூகம் எழுந்து நிற்பதற்கான காரணி கள். இந்தப் பெறுமானங்களை வாழ்வாகக் கொள்ளும் ஒரு சமூகம் எப்பொழுதும் உல கிற்கே வெளிச்சம் கொடுப்பவர்களாகக் காணப் படுவர்.

உலகில் மனித வரலாறு ஆரம்பித்த நாள் முதல் வஸதிய்யா ஒரு வாழ்வு முறையாக இருந்து வந்திருக்கிறது. இது நவீன காலத்தில் சில அறிஞர்களின் ஒரு கண்டுபிடிப்பல்ல அல் லது சில தீவிர நிலைகளைக் கையாள வந்த ஒரு பொறிமுறை மாத்திரமல்ல அல்லது ஏதோ ஒன்றுக்கு எதிராகப் பெறப்பட்ட மாற்று நிலைப் பாடல்ல. மாற்றமாக எல்லாத் தரப்பினரையும் நீதியாகக் கையாளும் ஒரு ஒழுங்கு, உலகில் மனித இனம் செழிப்பதற்கான ஒரு வாழ்வு முறை.

2005 ஆம் ஆண்டு மக்காவில் நடைபெற்ற வஸதிய்யா பற்றிய மாநாட்டில், வஸதிய்யாவுக் கான சர்வதேச மன்றத்தின் பொதுச் செயலாளர், பொறியியலாளர் மர்வான் பாஊரி அவர்கள் முன்வைத்த கருத்து, இந்த இடத்திற்கு மிகவும் பொருத்தமானது.


''வஸதிய்யா என்பது ஒரு சிந்தனை, விழு மிய மூலாதாரம். எந்த விடயத்திலும் மிகப் பொறுத்தமானதைத் தெரிவு செய்வதற்கான அளவுகோள். அது எமது சிந்தனை, செயற்பாடு, சட்டம், நிலைப்பாடு, பண்பாடு, நடத்தை என எந்தப் பகுதியிலும் மிகப் பொறுத்தமானதைத் தேர்ந்தெடுப்பதற்கான மூல அளவுகோள். எமது கொள்கைகள், கருத்திட்டங்கள், நிலைப் பாடுகள் அனைத்திலும் பொதிந்திருக்க வேண் டிய ஒரு நேர்மை. அதே சமயம் வஸதிய்யா என்பது அரைவாசித் தீர்வுகளைக் குறித்து நிற்ப தில்லை. மாற்றமாக எமது தெரிவுகள், செயற் போக்குகள் அனைத்திலும் மிகச் சரியானதை அடைந்து கொள்வதற்கான இடைவிடாத உழைப்பு. வஸதிய்யா என்பது வலது சாரிக்கும் இடது சாரிக்கும் நடுவில் எடுக்கும் ஒரு நிலைப் பாடு அல்ல. மாற்றமாக அது ஒரு சிந்தனை முறை, பண்பாட்டுத் திட்டம், நடத்தைக் கோலம்'' என்கிறார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில் ''வஸ திய்யா என்பது ஒன்றை நியாயப்படுத்துவதற் கான அல்லது விட்டுக் கொடுத்து செல்வதற்கான ஒரு அணுகுமுறை என்று மாத்திரம் சிலர் கருது கின்றனர். மாற்றமாக அது ஒரு சீர்திருத்த அணுகுமுறை. அது ஒரு குறிப்பிட்ட கட்டத் திற்குரியதல்ல. மாற்றமாக எல்லாக் காலங் களிலும் பின்பற்றப்பட வேண்டிய ஒரு வாழ் வொழுங்கு. வஸதிய்யா நீதியையும் தயாளத் தையும் பிரதிபலிப்பது போல மனித இனத்திற் கான உயர் மாதிரியையும் பிரதிபலிக்கின்றது. வஸதிய்யா என்பது கம்பீரம், சக்தி. அது ஒருபோதும் பலவீனமோ அல்லது அடிபணி தலோ அல்ல. யார் நடுவில் நிற்கிறாரோ அவர் ஓரங்களை ஆள்வதற்கு சக்தி பெறுகிறார்'' என்று கூறியுள்ளார்.

வஸதிய்யா பற்றிய அற்புதமான வரிகள் இவை. இந்தக் கண்ணோட்டத்தில் வஸதிய்யா புரிந்து கொள்ளப்படுகின்ற போது அது எந்த சமூகத்தையும் உயர்ந்த இடத்தில் கொண்டு போய் அமர்த்தி விடும். அது அவர்களது பார் வைகளை விசாலப்படுத்தி விடும். சிந்தனை களை ஒருமுகப்படுத்தி விடும். உள்ளங்களைப் பிணைத்துவிடும். அவர்களை முன்னோக்கி உந்தித் தள்ளி விடும். அவர்கள் ஒன்றுபடு வார்கள். அனைவரையும் அரவணைப்பார்கள். எல்லாத் தீவிரங்களையும் தவிர்ப்பார்கள். அவர் களது செயலில் நிதானமிருக்கும். நாவில் உண்மையிருக்கும். சிந்தனையில் ஆழமிருக் கும். உழைப்பில் சக்தியிருக்கும். பயணத்தில் உறுதியிருக்கும். இலக்கில் தெளிவிருக்கும். இதுதான் சமூக எழுச்சியின் ஆரம்பப் புள்ளி. இதனை வஸதிய்யா தொடக்கி வைக்கிறது.

அல்லாஹ் எம்மை அங்கீகரிக்கட்டும்.

# உறவுகளைப் பலப்படுத்தும் சில வழிமுறைகள்



சகோதரத்துவத்தின் சிறப்பு, அவசியத்தை வலியுறுத்திய இஸ்லாம், அதனை வெறுமனே ஒரு கோட்பாடாக பார்க்காமல் நடைமுறையில் வாழ வேண்டிய ஒன்றாகவே பார்க்கின்றது. அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கான பல்வேறு வழிமுறைகளை காட்டித் தந்துள்ளது. எந்த கோட்பாடு நடைமுறை வடிவம் பெறவில் லையோ அதனால் பயன் கிடைக்காது. இஸ் லாத்தை வழிகாட்டல்களாக ஏற்ற ஆரம்ப தலைமுறையினர் அதனை நடைமுறைப்படுத் திக் காட்டியமை இதற்கான மிகச் சிறந்த நடை முறை ஆதாரமாகும்.

நபி (ஸல்) அவர்கள் சகோதரத்துவத்தை நடைமுறையில் வாழ்ந்து காட்டிய முன்மாதிரி யாவார். அல்குர்ஆன் கூறும் போதனைகளின் நடைமுறை வடிவமாக நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள் என்ற ஆயிஷா (ரழி) அவர்களது சான்றிதழ் எல்லா வகையிலும் பொருத்த மானது.

நடைமுறையில் சகோதரத்துவ உறவுகள் வாழ்வதற்கானச் அமுல்படுத்த, சாத்தியமான சில வழிமுறைகளை இங்கு பார்ப்போம்.

*1. ஸலாத்தைப் பரப்பல்:*

ஸலாம் என்ற வார்த்தை அமைதி, சாந்தி, சமாதானம் போன்ற பல கருத்துக்களை




அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத்
azadamm@yahoo.com

பொதிந் துள்ளது. முஸ்லிம்களின் வாழ்த்துச் செய்தியாக ஸலாமே காணப்படுகின்றது. சுவனவாசிகளை அல்லாஹ்தஆலா ஸலாம் சொல்லி வரவேற்ப தாக அல்குர்ஆன் சொல்கின்றது.

ஸலாத்தை அதிகம் பரப்புவதன் மூலம் சுவனத்தை அடையலாம் என்று கூறும் இஸ்லாம், எல்லாக் காலத்திலும், எல்லா இடங்களிலும் அனைவருக்கும் சொல்ல முடியுமான பொதுச் சொல்லாக ஸலாத்தை அறிமுகப்படுத்தி இருக்கின்றது.

**2. மற்றவர்களுக்காக பிரார்த்தித்தல்:**

துஆ முஸ்லிம்களின் மிகப் பெரிய ஆயுதம். இதில் விஷேடமானது தனது சகோதரனுக்கு மறைவான நிலையில் பிரார்த்தனை செய்வது. இது பற்றி வந்த ஹதீஸில் இப்படி யார் தன் சகோதரனுக்கு துஆ செய்கின்றாரோ அதே போன்று அவருக்கும் கிடைக்க வேண்டும் என மலக்குகள் துஆ செய்வார்கள்.




மனிதன் தனக்காக மட்டும் வாழக் கூடிய இந்த சட வாழ்க்கையில் பிறருக்காக எவ்வளவு துஆ செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது! இன்று முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கியுள்ள பல்முனைத் தாக்குதலிலிருந்து காப்பாற்றுவதற்கான போராட்டத்தில் அனைவரும் துஆவின் மூலம் இணைந்து கொள்ளலாம். உண்மையில் இப்படியாக துஆ செய்வது சகோதரத்துவத்தின் ஒரு அடையாளமாகும்.

**3. கஷ்டங்களை நீக்கல்:**

மனிதன் எப்போதும் ஒரே நிலமையில் வாழ முடியாது. சில சந்தர்ப்பங்களில் சந்தோசமாகவும், சிலபோது கவலையுடனும் வாழ்வான். கவலை, கஷ்டங்களுக்கு பல காரணங்கள் இருக்க முடியும். பொருளாதாரப் பிரச்சினைகள், குடும்பப் பிரச்சினைகள், உதவிக்கு ஆள் இல்லாப் பிரச்சினை என பிரச்சினைகள் காணப்பட முடியும். இவ்வகையான சூழ்நிலையில் ஒருவரது துயரை துடைத்துவிடுவது இஸ்லாம் போதிக் கும் மகத்தான விடயங்களில் ஒன்றாகும். இதன் மூலம் மறுமை வாழ்வில் ஏற்படவுள்ள கஷ்டங்களை அல்லாஹ் நீக்கி விடுவான் என்ற நபிவாக்கு எம்மை இச்செயலை செய்யுமாறு தூண்டிக் கொண்டிருக்கின்றது.

இந்நோக்கத்தை அடையும் வகையில் இன்று தேசிய, சர்வதேச நலன்புரி நிறுவனங்கள் செயற்படுகின்றன. இதன் மூலம் பல ஆயிரம் குடும்பங்கள் பயனடைகின்றன. குறிப்பாக முஸ்லிம்களை இலக்காக வைத்துச் செயற்படும் கிறிஸ்தவப் பிரச்சார நடவடிக்கைகள் வெற்றியளிக்காமல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நிறுவன வடிவில் இவ்வகைச் செயல்கள் இருப்பது ஆரோக்கியமானது. இலக்கு வைத்து செயற்பட முடியுமாயுள்ளது. எனினும், இது தனிநபர் நலன்புரி சேவைகளுக்குத் தடையாக அமைய மாட்டாது. இன்று இஸ்லாமிய பாதையில் ஷஹீதாக மரணித்த எத்தனையோ குடும்பங்களை தனிநபர்களாக பலர் பொறுப்பெடுத்து உதவி செய்கின்றார்கள் என்ற நற்செய்தி எமது உள்ளங்களை ஆனந்தப்படுத்துகின்றது.



### 4. பிறர் பற்றி நல்லெண்ணம் வைத்தல்:

மனிதன் இயல்பில் குறைபாடு உள்ளவன். எந்த ஒருவரும் முழுமையடைய முடியாது. அது அல்லாஹ்வுக்குரிய பண்புகளில் ஒன்று. எனவே நாம் மனிதர்கள் விடக் கூடிய தவறுகளை எப்படிப் பார்க்க வேண்டும்? (பாவங்களல்ல) ஒரு வேலையை உரிய நேரத்தில் செய் யாவிட்டால், வருகை தாமதமாகினால், எனது கருத்துக்கு மாற்று கருத்தைக் கொண்டிருந்தால், எனது செயற்பாடுகளை விட வித்தியாசமான செயற்பாடுகளை எனது சகோதரன் செய்யும் போது, இவற்றை பலவாறு பார்க்கலாம்.

நல்லெண்ணம் கொள்வது மிக உயர்ந்த பண்புகளில் ஒன்று. எதிர்மறையாக தன் சகோதரர்களது செயல்களைப் பார்க்காது நியாயம் காணும் ஒருவனாக நாம் இருக்க முயற்சிப்பது எல்லா வகையிலும் சிறந்தது. பிறர் பற்றி தனதுள்ளத்தில் தப்பெண்ணம் கொள்ளாதிருந்தால் ஒரு ஸஹாபி சுவனம் பெற்றுக் கொண்டார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இல்லாதபோது மற்றவர்களது செயல்களுக்கு நாம் விளக்க சொல்ல முற்படுவோம். அது பல போது பிழையாகவும் அமையலாம். ஏன் நாம் அந்தப் பாவத்தை சுமந்து கொள்ள வேண்டும்.

### 5. ஐவேளைத் தொழுகை:

இஸ்லாம் ஐவேளைத் தொழுகைகளை முஸ்லிம்களுக்கு கடமையாக்கி உள்ளது. இத்தொழுகைகளைக் கூட்டாக நிறைவேற்றுமாறு வலியுறுத்தி உள்ளது. இதற்குப் பின்னால் பல நோக்கங்கள் காணப்படுகின்றன.

ஒரு ஊர் வாசிகள் நாளாந்தம் சந்திக்கும் இடமாக பள்ளிவாசல் காணப்படுகின்றது. அங்கு ஐவேளைத் தொழுகைக்காக ஊர்வாசிகள் ஒன்று கூடுகின்றனர். ஒருவரை ஒருவர் அறிமுகமாகிக் கொள்கின்றனர். தனிப்பட்ட பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள் பலபோது அவர்களுக்கு மத்தியில் கலந்துரையாடப்படுவதுண்டு. இதனால் ஒருவருக்கொருவர் கை கொடுக்கும் அழகிய சூழல் பிறக்கின்றது.

தொழுகையின்போது ஸப்பில் வேறுபாடுகள் இல்லாது அனைவரும் சமமாக, இடைவெளி விடாது நெருக்கமாக நின்று அல்லாஹ்வை வணங்குகின்றனர். அனைவரது நோக்கமும் இறைத் திருப்தியைப் பெற்றுக் கொள்வதே. தமக்கு மத்தியில் காணப்படும் கோபதாபங் களை மறந்து விட்டு ஒற்றுமை, சகோதரத்து வத்தை ஏற்படுத்தும் ஒன்றுகூடலாக அது மாறு கின்றது. எவ்வளவு அருமையான சந்திப்பு!

தொழுகையில் ஓதப்படும் வசனங்கள், அவ்ராதுகள் இக்கருத்தை இன்னும் வலுப்படுத்துகின்றன. சூரா பாதிஹாவை ஓதும்போது ஒற்றுமை, சமூக உணர்வு பிறக்கின்றது. ''உன்னையே வணங்குகின்றோம். உன்னிடமே உதவி தேடுகின்றோம்'' என்று பன்மையில் கூறுவது இதனை சுட்டிக்காட்டுகின்றது.

அத்தஹிய்யாதில் ''அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன்'' என்று கூறும் போது தன்னுடன் மட்டும் ஸலாத்தைச் சுருக்கிக் கொள்ளாது அனைத்து ஸாலிஹீன்களையும் ஸலாத்தில் தொழுகையாளி சேர்த்துக் கொள்கின்றான். இப்படியாக தனது உள்ளம் விரிவடைகின்றது. மற்றவர்களையும் இடைக்கிடை நினைவுபடுத்தும் அருமையான வணக்கமாக தொழுகை காணப்படுகின்றது. இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் ஜமாஅத்தாக தொழுவதன் சிறப்புக்களை அதிகமாகக் கூறியுள்ளார்கள்.

### 6. ஜும்ஆத் தொழுகை:

ஐங்காலத் தொழுகைக்காக முஸ்லிம்கள் சந்திப்பதை விட வாராந்த ஜும்ஆ சந்திப்பு சற்று வித்தியாசமானது. நேரகாலத்துடன் பள்ளிவாசலுக்கு வருவது சுன்னத்தானது. குளித்து, புத்தாடை அணிந்து, நறுமணத்துடன் வருமாறு இஸ்லாம் போதிக்கின்றது. தொழுகைக்காக சமுகமளித்தோருக்கு பிரசங்கம் செய்வது ஜும்ஆத் தொழுகையின் ஒரு அங்கமாகக் காணப்படுகின்றது.

இந்த சந்திப்பில் அதிகமானவர்கள் அறிமுகமாகிக் கொள்கின்றார்கள். உறவுகள் பலமடைகின்றன. நாளாந்த தொழுகைகளில் சந்திக்க முடியாதிருந்த சிலரையும் சந்திக்கும் வாய்ப்பு இங்கு உருவாகின்றது. இதன் மூலம் மேலும் தொடர்புகள் புதுப்பிக்கப்படுகின்றன. முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள். ஈயத்தால் வார்க்கப்பட்ட கட்டிடத்தைப் போன்று ஒரே அணியாக இருக்க வேண்டியவர்கள். இவர்கள் அனைவரும் சகோதரத்துவ உணர்வுடன் உயர்ந்த இலக்குகளுக்காக உழைத்தால் எவ்வளவு பெரிய சாதனைகளை செய்யலாம் என்ற நம்பிக்கையை ஜும்ஆ சந்திப்பு தருகின்றது. இதற்கு ஒப்பானதாக இரு பெருநாள் தொழுகைகளும் காணப்படுகின்றன.

### 7. ஹஜ் கடமை:

அல்லாஹ்வை ரப்பாக ஈமான் கொண்ட அனைவரும் சகோதரர்களே. இதற்கான அடிப்படை பூகோள எல்லைகளல்ல. நிறங்களோ, மொழிகளோ அல்ல. இவை அனைத்தையும் தாண்டி அனைத்து முஸ்லிம்களையும் இணைக்கும் பாலமாக அகீதா காணப்படுகின்றது. இது இஸ்லாத்திற்கே உரிய ஒரு சிறப்பம்சம். எனவே எந்தக் கோடியில் ஒரு முஸ்லிம் வாழ்ந்தாலும் அவன் அடுத்த கோடியில் இருக்கும் முஸ்லிமிற்கு சகோதரனாவான்.

இவ்வடிப்படையை நடைமுறையில் காட்டும் பலமான அத்தாட்சியே ஹஜ் கிரியையாகும். அனைத்து நாட்டவர்களும் மக்கா என்ற புதிய பிரதேசத்தில் ஒன்று சேர்கின்றனர். தமது நாட்டின் ஆடைகளை விட்டு விட்டு அனைவரும் ஒரே வெந்நிற ஆடையை அணிகின்றனர். எல்லா வகையான மொழிகளையும் ஒரு புறம் வைத்துவிட்டு, தல்பியாவை அனைவரும் மொழிகின்றனர். வித்தியாசமான இலக்குகளை பக்கத்தில் போட்டு விட்டு அல்லாஹ்வின் திருப்தியை எதிர்பார்த்து கஃபாவை நோக்கி அனைவரது முகங்களும் திரும்பி விடுகின்றன.

ஒரே வகையான கிரிகைகள். ஒரே இடத்தில் அனைவரையும் ஒன்று சேர்க்கும் இந்த ஹஜ் கடமை முழு முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமை, சகோதரத்துவம், ஐக்கியத்தை வலியுறுத்தும் சர்வசேத ஒன்று கூடலாக காணப்படுகின்றது. முஸ்லிம் உம்மாவின் பிரச்சினைகள், விவகாரங்கள், நற்செய்திகளை அனைத்து நாட்டவர்களுக்கும் ஒரே இடத்தில் பரிமாறிக் கொள்வதற்கான வாய்ப்பு இங்கு தான் கிடைக்கின்றது. இஸ்லாம் எவ்வளவு அழகான மார்க்கம்.

இவ்வழகிய மார்க்கத்தை நாம் பிறருக்கும் எத்திவைப்போம். அதற்காக உழைக்கும் சகோதரர்களாக மாறுவோம். அல்லாஹ்வின் உயர்ந்த கூலிகளைப் பெற்றுக் கொள்வோம்.



அஷ்ஷெய்க் பிஸ்தாமி
bisthamy@gmail.com

# தஃவாப் பாதையில் நிலைத்து நிற்கும் முஃமீன்களின் பண்புகள்

(இது ஓர் உரையாடல் வடிவில் அமைகிறது.அல்குர்ஆன் கூறுகின்ற திட உறுதி பூண்ட நபிமார்களின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு ஸுன்னா சீறா சகிதம் நவீன கால இக்வானிய மாமனிதர்களின் உறுதிநிலையை மேலோட்டமாக நினைவுபடுத்துவதாக உள்ளது.)

**காலித்:** அல்லாஹ்வின் விருப்புக்கும் நெருக்கத்துக்கும் உட்பட்டவர்கள் நபிமார்கள் தானே. அப்படி இருக்க அவர்களை ஏன் மக்களிடம் கேவலப்படும் அளவு பயங்கரமான சோதனைகளைக்கொண்டு அல்லாஹ் பரீட்சித்தான்.இப்படியான நன்மக்கள் ஏன் சோதிக்கப்பட வேண்டும்?

**ஹாமித்:** பலபோது இது பற்றி நானும் சிந்தித்ததுண்டு. இது இயல்பானது. ஓர் இலக்கை இறுதிவரை அடைய வேண்டுமானால் அந்தப்பாதையில் அது கரடு முரடாக இருப்பினும் தொடர்ந்தும் பயணிக்க வேண்டுமல்லவா. சவால்களைக் கண்டு பின்வாங்கினால் தனது பலத்தை பிரயோகிக்காமல் இருந்தால் எதையாவது அடைய முடியுமா? நீங்களே சிந்தியுங்களே. இருப்பினும் நபிமார்கள் அல்லாஹ்வின் கட்டளையை மக்களுக்கு சொல்லும் போது மக்கள் எதிர்த்த காரணத்தை பார்த்தால் அவர்களது மூதாதையரின் தலைமுறை தலைமுறையாக மார்க்கங்கள், அனுஷ்டானங்கள், வழக்காறுகள், சம்பிரதாயங்கள் போன்றவற்றை விடுமாறும் ஏக இறைவனை நம்பிக்கை கொண்டு அவன் சொன்ன பிரகாரம் வாழுமாறும் சொன்னதை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. உடனடியாக அதனை கைவிடவும் முடியவில்லை.

எனவே நபிமார்களை எதிர்த்தார்கள். கடுமையாக விமர்சித்தார்கள். பலரை கொலையும்

செய்துள்ளனர். தாங்கொணா சித்திரவதைகளை யும் இம்சைகளையும் கொடுத்து கொடுமைப் படுத்தியும் உள்ளனர். நீங்கள் நேற்றைய ஜும்ஆ உரையை கேட்கவில்லையா?

**காலித்:** நான் நேற்று முக்கியமான வேலை ஒன்று இருந்ததால் விரைவாக குத்பா முடியும் பள்ளி ஒன்றுக்கு சென்றேன்.அது சரி நீங்கள் போன பள்ளியில் என்ன சொன்னார்? ஏதாவது புதிய விடயங்கள் இருந்ததா? அல்லது வழமை யான பாணியா?

**ஹாமித்:** ஆமாம் காலித். நானும் நேர காலத் தோடு சென்றேன். அல்லாஹ்வின் மாளிகையில் அமர்ந்திருக்க இப்போது அதிகமான நேரங்கள் கிடைப்பதில்லையே. வாழ்க்கை அப்படி வித்தி யாசமாக மாறியுள்ளதே. அதனால் காலையி லேயே குளித்து சுத்தமாகி, பள்ளிக்கு சென்று அமல்களில் ஈடுபட்டு, குத்பாவை செவிமடுத் தேன்.

அங்கு நபிமார்களில் மிகவும் சோத னைக்கு ஆளான சில நபிமார்களை குறிப்பிட்டார்கள். அவர்கள் உலுல் அஸ்ம் என அழைக்கப்படுவர். அவர்களுக்கு அல்லாஹ்விடத்தில் உயர்ந்த அந் தஸ்துகள் உண்டு. பலத்த சோதனைகளை கடந் தும் நிலைத்து நின்றனர்.

**காலித்:** அது என்ன உலுல் அஸ்ம்? அப்படி என்றால் என்ன?

**ஹாமித்:** அப்படி என்றால் திட உறுதி பூண்ட வர்கள். அல்லாஹ்வின் மார்க்கத்தை பூமியில் நிலைநாட்ட முனைந்த பொழுது அசத்திய வான்களின் திட்டமிட்ட கொடுமை யானதும் கடுமையானதுமான சோதனைகள் அனைத்தை யும் தாங்கிக் கொண்டு சற்றும் நிலைகுலை யாமல் தளம்பாமல், தயங்காமல், தளர்வின்றி இறுதி வரை உறுதியாக நின்றவர்கள். அவர் களுடைய வரலாற்று நிகழ்வுகளை அல்குர்ஆன் அதிகமாக குறிப்பிடுகிறது.

அவர்களுக்கு மரண அச்சுறுத்தல் கூட வந் துள்ளது. குடும்பங்களையும் அர்ப்பணித்துள்ள னர். இருந் தும் உறுதியாக இருந்தனர். மனதை யும் பாதத்தையும் நிலைப்படுத்தினர்.

**காலித்:** எனக்கு தெரிந்தவரை எங்கள் நபி முஹம்மத்(ஸல்)மட்டும் தான் சோதிக்கப்பட் டுள்ளார் என்று தான் நினைத்திருந்தேன். இன் னும் நபிமார்கள் சோதிக்கப்பட்டுள்ளதை இப் போது தான் அறிகின்றேன். இப்படி தொடராக சோதிக்கப்பட்ட அடுத்த நபிமார்கள் பற்றி சொன்னார்களா நேற்றைய ஜும்மாவில் கதீப் அவர்கள்?


**ஹாமித்:** ஆம். அல்லாஹ்வால் மிகவும் கடுமையாக சோதிக்கப்பட்டவர் மூஸா (அலை) அவர்கள். இவரது வரலாறு அல்குர்ஆனில் அதிகம் கூறப்பட்டுள்ளது. இனி இல்லை என்ற அளவு சோதிக்கப்பட்டார்கள்.

**காலித்:** அவர் பிறக்கு முன்னரே கொலை செய்யப்பட இருந்த நபி தானே. அவரது தாயார் அவரை பெட்டியில் வைத்து நதியில் அனுப் பினார் தானே. அன்றைய மன்னன் ஆட்சிக்கு பயந்துதானே அப்படி நடந்துகொண்டான்?

**ஹாமித்:** ஆமாம் அவரே தான். அவரை எதிர்த்தவார்கள் பனூ இஸ்ரவேலர்கள். தம்மால் முடியுமான அனைத்து வழிமுறைகளாலும் கடு மையாக எதிர்த்தனர். ஆனால் அவர் தனது ஈமானிய பலத்தால் திடமாக இருந்தார். அல் லாஹ்விடம் உதவி தேடினார். பொறுமையாக இருந்தார். அவரை எதிர்த்த கொடிய மன்னன் பிர்அவ்ன் (2ம் ராம்சீஸ்) தன்னையே கடவுள் என்று தம்பட்டம் அடித்தான்.

பிறக்கும் ஆண் களைக் கொன்று பெண்களை மட்டும் வாழ விட்டான். மக்களை அற்பமாக இழிவாகக் கருதினான். ஆடம்பரத்தில் அநி யாயத்தில் அத்துமீறலில் மூழ்கிப்போனான். இறுதியில் கடலில் மூழ்கி செத்துப்போனான். அப்படியான கொடூரமானவன் அவன்.அவனை யும் கூட சத்திய மார்க்கம் சென்றடைய வேண் டும் என்பதற்காய் அல்லும்பகலும் அயராது பாடுபட்டார்கள். அவனது அதிகார பலத்தின் முன்னால் மூஸா நபியின் உறுதிப்பாடுதான் இறுதியில் வென்றுவிட்டது.

**காலித்:** நூஹ் நபியும் அப்படியான உறுதி வாய்ந்த நபியா? ஏனென்றால் அவர் தொடர்ச்சி யாக 95 வருடம் தஃவா செய்ததாக கற்றுள்ளேன்.



ஆனால் மிகவும் சொற்பமானவர்களே அவரை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று பாடசாலையில் கற்றுள்ளேன். அதுதான் அப்படி கேட்டேன்.

**ஹாமித்:** ஆமாம் அவர் நஜியுல்லாஹ். அல்லாஹ்வால் உதவி செய்யப்பட்டவர் என்ற சிறப்பு பெயருக்கு சொந்தக்காரர். ''அபுல் பஷர் அஸ்ஸானி'' மனித குலத்தின் இரண்டாம் தந்தை எனவும் அழைக்கப்படுகிறார். தான் அழைப்பு விடுக்கின்ற விடயம் சத்தியம், அது அல்லாஹ் வின் வேதவாக்கு என்று அறிந்தும் மக்கள் அவரை புறக்கணித்தனர். அவரது வரலாறு குறித்து ஸூறா நூஹ் பேசுகிறது.

இரவு பகலாக அழைப்பு விடுத்தும் மக்கள் அவரை புறக்கணித்தனர். தமது ஆடைகளால் சுருட்டியவாறு விரல்களால் காதுகளை மூடிக் கொண்டு ஓடி ஒளிந்தனர். ஆனால் அவர் நிராசை அடையவில்லை. விளைவுகளை எதிர் பார்க்கவில்லை. மக்கள் சாரை சாரையாக வந் தால் தான் தஃவா வெற்றிப் பாதையில் செல் லும் என்று கருதவில்லை. தனது ஆயுள் முடி யும் வரை உழைத் தார்கள். பிரச்சாரம் செய்தார் கள். போராடினார் கள். சலிக்காமல் அலுக்காமல் அழைப்பு விடுப்பதில் உறுதியாக நின்றார். வெற்றிபெற்றார்.

**காலித்:** இன்றைய நவீன மனிதர்கள் எடுத்த எடுப்பிலே விளைவை எதிர்பார்க்கின்றனர். ஓரிரு நாட்களில் உயர்ந்த அடைவுகளுக்காக காத்திருக்கின்றனர். எந்த முயற்சியும் தியாகமும் இல்லை. பொறுமை நிதானம், தூர நோக்கு, விட்டுக்கொடுப்பு எதுவுமே இல்லை. இப்படி இருந்தால் எப்படி வெற்றி பெறுவது. எப்படி இலக்கு நோக்கி பயணிப்பது? நான் சொல்வது சரியா?

**ஹாமித்:** உண்மை தான். நேற்று குத்பாவில் சொன்ன அடுத்த மாமனிதர் யார் தெரியுமா? அவர்தான் நபி இப்ராஹீம். அல்லாஹ்வின் நேசன். இஸ்லாத்தை வாழ வைக்க தனது குடும் பத்தையும் விட்டுவிட உறுதியுடன் இருந்தார். தனது தவப்புதல்வன் இஸ்மாஈல் (அலை) அவர்களை அவரது தாயுடன் யாருமற்ற பாலை வனத்தில் தன்னந் தனியாக தவிக்க விட்டு வந்தார். அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணி

வது மட்டும்தான் இதன் நோக்கம். அதே குழந்தை வளர்ந்ததும் அறுத்துப் பலியிட கட்டளை வந்தது. அதுவும் கனவில் வந்த கட்டளை. அதனையும் மறைக்காமல் முன்வந்து நிறைவேற்ற தயாரானார். அல்லாஹ்வின் உதவியில் உள்ள நம்பிக்கையும் திடமான உறுதியும் தான் காரணம். கடைசியில் அவரை நெருப்புக் குண்டத்தில் வீசி எறிய மன்னன் நம்ரூத் தயாரான போதும் பின்வாங்காமல் மலைபோல உறுதியாக இருந்தார். அவரது உறுதியைக் கண்டு அல்லாஹ் நெருப்பையும் குளிராக்கி விட்டான். இப்படியாக தனது பாதையில் உறுதியை கைவிடவில்லை. ஸ்திரமற்று ஆடவில்லை. எனவே கடைசியில் அமோக வெற்றி கண்டார். இப்படி இன்னும் இருவரது வரலாற்றையும் சுருக்கமாக சொன்னார்.

**காலித்:** யார் அவர்கள்? ஒன்று முஹம்மத் நபியாக இருக்க வேண்டும். இல்லையா? முஹம்மத் நபியை பற்றி ஓரளவு அறிந்து வைத்துள்ளேன். அடுத்தவரைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்.

**ஹாமித்:** ஆமாம் அப்படியே தான்.அடுத்தவர் ஈஸா அலை அவர்கள். அவர்களும் கடுமையாக சோதிக்கப்பட்டார்கள். அவரது தாயார் மர்யம் அவர்கள். ஈஸா நபியை பிரசவித்தது முதல் சோதனை ஆரம்பமானது. அப்போது அவரது தாயும் உறுதியான மனதுடன் இருந்தார். அவரோடு பக்க பலமாக இருந்தவர்கள் ஹவாரிய்யூன்கள். கடைசியில் இஸ்லாத்தை எதிர்த்த விரோதிகளால் கொல்லப்பட தீர்மானிக்கப்பட்டவேளை அல்லாஹ் அவரை உயர்த்தி விட்டான். இறுதிநாளின்போது அவர்கள் உலகிற்கு இறங்கி நீதியான ஆட்சியை மேற்கொள்வார்கள்.

**காலித்:** நபிமார்கள் அல்லாஹ்வின் உதவியை பெற்றதால் இப்படி உறுதியாக இருக்கும் திடமும் பலமும் மனோ வலிமையும் கிடைத்திருக்கும். சாதாரண மனிதர்களால் இப்படி முடியுமா? சோதனைகளின்போது அஞ்சி நடுங்கி பின்வாங்கி விடுவார்கள் இல்லையா?

**ஹாமித்:** அப்படி இல்லை. நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் தோழர்கள் அதிகமாக சோதிக்கப் பட்டார்கள். பிலால் (ரழி) மிகவும் கடுமையாக உமையா இப்னு கலப் என்பவனால் சோதிக்கப்பட்டார். பட்டப் பகலில் சுடு மணலில் நெஞ்சில் பாராங்கல்லை வைத்து காலால் மிதிப்பான். இருந்தும் கூட 'அஹதுன் அஹதுன்' என்று அல்லாஹ் ஒருவனையே புகழ்பாடி துதித்தார்.


ஹிஜ்ரத்தின்போது பல நபித்தோழர்கள் தமது சொத்துக்களை குடும்பத்தை இழந்தும் கூட இஸ்லாத்தை விட முன்வரவில்லை.உறுதியாக இருந்தனர். இஸ்லாத்துக்காக உண்மையாக வாழ்ந்தனர். தூய்மையான கொள்கைவாதிகளாக வாழ்ந்தனர். அதிலே நிலைத்து நின்றனர். காபிர்கள் கூட மலைத்துப்போயினர்.

'இஸ்திகாமத்' எனும் நிலைத்திருக்கும் உயர் பண்பு உண்மையான இறைவிசுவாசிகளிடம் மட்டுமே இருக்கும். இந்தப் பண்பு கொண்ட மனிதர்கள் உலகில் வாழும் காலமெல்லாம் எதிரிகள் சளைக்காமல் செயற்படுவார்கள்.

**காலித்:** இப்படியான உறுதியான மனிதர்கள் இன்றைய நவீன டிஜிடல் உலகிலும் உள்ளார்களா? அது சாத்தியமா?

**ஹாமித்:** ஏன் இல்லை, உங்களுக்கு ஒன்று தெரியுமா? 1924 ஆம் ஆண்டு இஸ்லாமிய கிலாபத் வீழ்ச்சியுற்றதை அடுத்து இஸ்லாமிய உலகிற்கு வழிகாட்ட வேண்டும் என்ற நோக்கில் இமாம் ஹஸனுல் பன்னா என்ற இளைஞன் இஹ்வானுல் முஸ்லிமூன் எனும் இயக்கத்தை உருவாக்கினார். அதன் அங்கத்தவர்களை பயிற்றுவிக்கும்போது ஸபாத் எனப்படும் நிலைத்திருத்தல் எனும் பண்பையும் அவர்களிடம் ஆழமாக வளர்த்தார். கொள்கையில் உண்மையான பற்றுள்ளவர்கள் அதில் உயிரையும் விடுவார்கள்.

இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் அவர்கள் சொன்னது போல இஸ்லாம் மடிந்து தான் வாழ்வதை விட தான் மடிந்து இஸ்லாம் வாழ்வது மேல் என நினைத்து செயற்படுபவர்கள். இன்று அவரது நவீன சிந்தனைக்கு சுமார் 90 வருடங்கள் ஆகின்றன. அவர் உருவாக்கிய மனிதர்கள் வரலாறு படைத்த மனிதர்களாக



குறிப்பிடலாம். தவிரவும் அஹ்மது யாஸீன், ரன்தீசி போன்ற ஷஹீத்களையும் குறிப்பிடலாம்.

**காலித்:** இப்படி உறுதியான நிலைப்பாட்டு டன் வாழ்ந்த பெண்களும் உள்ளனரா?

**ஹாமித்:** ஏன் இல்லை. ஸைனப் அல் கஸ்ஸாலி இப்படியான பிரபலமான பெண் அழைப்பாளரவார்.

**காலித்:** இக்வான்கள் அல்லாத வேறு மாமனிதர்களும் உள்ளனரா?

**ஹாமித்:** நிச்சயமாக, இஸ்லாமிய வரலாறு நெடுகவும் இஸ்லாத்தை பாதுகாக்க முனைப் புடன் போராடிய ஆயிரக் கணக்கான தியாகி களை குறிப்பிடலாம். ஜமாஅத் ஏ இஸ்லாமி அமைப்பின் ஸ்தாபகர் பலமுறை தூக்குமேடை சென்றுள்ளார். அசத்தியத்துக்கு முன்னால் ஆணித்தரமாக நின்று இஸ்லாத்துடன் வாழ்ந் துள்ளார். இப்படியான மாமனிதர்களின் வாழ்வு களை, வரலாறுகளை கட்டாயம் கற்க வேண் டும். எமது பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடு க்க வேண்டும். பெண்களுக்கும் கற்றுக் கொடு க்க வேண்டும்.

தனது காலங்களை நேரங்களை வீணாக்கும் வாலிபர்களுக்கு உயர்ந்த முன்மாதிரிகளை, உதாரண புருஷர்களை இனங்காட்டிக் கொடுக்க வேண்டும். இளந்தலைமுறையை நெறிப்படுத்த சமூகத்தை ஊக்குவிக்க வேண்டும்.

**காலித்:** நிச்சயமாக, நீங்கள் சொல்வதில் சமூகம் விரைவாக செயற்பட வேண்டும். இஸ் லாத்தை விட்டும் முஸ்லிம்களை திசை திருப் பும் சதிகள் பகிரங்கமாக அரங்கேறுகிறது. எனவே முஸ்லிம்களை இஸ்லாத்தில் நிலைத்து உறுதியுடன் வாழ வைக்க நாமும் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். நாம் ஒன்றாக இணைந்து பள்ளிவாசல் சம்மேளனம், அமைப்புகள், ஆலிம்கள், புத்திஜீவிகளை இணைத்து செயற் பட வேண்டிய தருணம் இது.

**ஹாமித்:** ஓம் காலித் உரையாடியதில் நேரம் போனதே விளங்கவில்லை. மீண்டும் ஒரு நாள் சந்தித்து விரிவாக பேசுவோம். இன்ஷா அல் லாஹ்.

வரலாற்று நூல்களில் இடம்பிடித்தனர். அசத்தி யத்தின் கொடுங் கரங்களுக்கு முன்னாலும் நாச கார துப்பாக்கிகளுக்கு முன்னாலும் இரும்புக் கம்பிகளின் பின்னாலும் வாழ்ந்த அவர்கள் இந்த நிலைத்திருத்தல் எனும் பண்பை அப் படியே நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள்.

வாழ்வின் பெரும் பங்கை சிறைகளில் கடத் தினர். ஆனால் கொள்கையில் இரும்பாய் நின்ற னர். இதுதான் நபிமார்களின் பண்பு.அற்பக் காரணங்களுக்காக இஸ்லாத்தை விட்டு விடும் சாதாரண மனிதர்களுக்கு முன்னாள் இத்தகைய இரும்பு மனிதர்கள் அற்புதமானவர்கள். அவரது கருத்துக்களை சிந்தனையில் நிலை நிறுத்தினார் கள். செயற்களத்தில் நிலையாக இருந்தார்கள். அவர்களது பேச்சிலும் எழுத்திலும் உறுதி நிலை காணப்பட்டது. உண்மைத் தன்மை வெளிப் பட்டது. கொள்கையின் பாலுள்ள பற்றும் வெளிப்பட்டது.

**காலித்:** அப்படியான ஓரிரு மனிதர்களை சொல்லுங்களே.

**ஹாமித்:** அதன் ஸ்தாபகர் இமாம் ஹஸனுல் பன்னா, ஷஹீத் செய்யித் குத்துப், ஸாலிஹ் அல் அஷ்மாவீ, முஹம்மது யூஸுப் ஹவ்வாஷ், அப்துல் பத்தாஹ் இஸ்மாஈல் போன்றோரை

# இறை பாதையிலும் சமூகப் புனரமைப்பிலும்

# குடும்பத் தியாகம்




அஷ்ஷெய்க்
ஏ.ஜீ.எம். இர்பான் (நளீமி)
irfanagm2011@gmail.com

எந்த செயற்பாட்டினதும் வேலைத்திட்டத் தினதும் வெற்றிநிலை தியாகம் என்ற பண்பில் தங்கியுள்ளது. அதிலும் குறிப்பாக கொள்கை கள், சிந்தனைகளின் வெற்றிக்கு இப்பண்பு இன்றியமையாத ஒன்றாகும். இஸ்லாமிய அறி ஞர்கள் குறிப்பிடுகின்றனர்: ''எந்த வெற்றிக்கும் கடின உழைப்புத் தேவை. தியாகமின்றி கடின உழைப்பு இடம்பெறமாட்டாது.''

இக்கருத்தை இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) அவர்கள் தனது ரஸாயிலில் குறிப்பிட்டுள் ளார்கள். இவ்வாறு அல்குர்ஆன் மிகத்தெளிவாக இதனை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

''யார் எமது விடயத்தில் (பாதையில்) கடு மையாக உழைக்கின்றாரோ அவருக்கு நாம் எல்லா வகையான வழிகளையும் காட்டிக் கொடுப்போம். வெற்றியைக் கொடுப்போம்.'' (அன்கபுத்: 69)



இவ்வசனம் வெற்றிக்கான வழிகளை கடின உழைப்பில் வைத்திருப்பதாக மிக அழகாக சித்தரித்துள்ளது. எனவே வெற்றியின் வடிவம் அதன் முயற்சியில்தான் தங்கியுள்ளது. முயற்சிகள் தியாகத்தின் பருமனுக்கேற்பவே அமையும். தியாகத்தின் வடிவங்கள் கொள்கையின் பயணப் பாதைக்கேற்ப பல்வேறுபட்டதாக அமைய முடியும்.

அவ்வகையில் இஸ்லாம் என்ற கொள்கை வெற்றி பெறுவதென்பதும் சமூகப் புனரமப்பு என்பதும் மிகப்பெரும் இலக்குகளாகும். இதன் வெற்றிநிலையை அடைவதென்பது சாதாரண முயற்சிகளும் தியாகங்களும் போதுமானவையல்ல. அதற்கு பாரிய தியாகங்களும் முயற்சிகளும் தேவைப்படுகின்றன.

இஸ்லாத்தின் வெற்றியென்பது சமூக மாற்றத்தில் தங்கியுள்ளது. எனவே சமூக மாற்றம் அல்லது சமூகப் புனரமைப்பு என்பது இரு சமூகத் தளங்களின் மாற்றத்தில் தங்கியுள்ளது. ஒன்று தனிநபர் மாற்றம். மற்றயது குடும்பத்தின் மாற்றம். தனிநபர் மாற்றம், குடும்ப மாற்றம் இரண்டும் இடம்பெறும் முக்கிய அரண்தான் குடும்பமாகும்.

எனவே இங்கு சமூகப் புனரமைப்பு தனி மனிதனாக, குடும்பமாக பல்வேறுபட்ட தியாகங்களை வேண்டியுள்ளது. சமூகப் புனர்நிர்மாணம் குடும்பம் என்ற அரண்மனையின் பாரிய உழைப்பையும் முயற்சியையும் தியாகத்தையும் வேண்டி நிற்கின்றது. இன்னொரு புரத்தில் தங்கியும் நிற்கின்றது. இல்லையெனில் சமூகப் புனர்நிர்மாணமானது சமநிலையற்ற ஒழுங்கீனமான விதத்தில் அமைந்துவிடும்.

அவ்வகையில் குடும்பத் தியாகமும் உழைப்பும் இன்றியமையாத ஒன்றாகும். வெற்றி உரிய வடிவத்தில் கிடைக்க வேண்டுமெனின் குடும்ப ரீதியான உழைப்புக்களும் முயற்சிகளும் அதன் உரிய வடிவங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு தியாகம், அர்ப்பணம் இன்றியமையாத ஒன்றாகும்.

இங்கு இஸ்லாமிய விதியை நாம் பார்க்க வேண்டும். ''சமூகம் சீர்பெற வேண்டும் எனின், குடும்பங்கள் சீர்பெற வேண்டும்.'' இவ்விதி மிகச் சரியாக நிலைநாட்டப்பட வேண்டும் எனின், குடும்பம் அதற்குரிய பணியையும் உழைப்புக்களையும் மேற்கொள்ள வேண்டும். எனவே சமூகப் புனர்நிர்மாணத்தில் குடும்பம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

அவ்வகையில் குடும்பம் இப்பாதையில் எவ்வகையான தியாயங்களைச் செய்து பயணம் செய்ய வேண்டும் என்பதை மிகச் சரியாகப் புரிந்திருக்க வேண்டும். இஸ்லாமிய வரலாறு அதன் பாதை ஓட்டத்தில் குடும்பங்களின் பங்களிப்பு, தியாகம் என்பவற்றினால் பல சாதனைகளை அடைந்துள்ளதை சித்தரித்துள்ளது. இதற்குச் சான்றாக நபி (ஸல்) அவர்களது குடும்பம், அபூபக்கர் (ரழி) அவர்களது குடும்பம், அபூ தஹ்தாஹ் (ரழி) அவர்களது குடும்பம்... போன்ற குடும்பங்களை குறிப்பிட முடியும். அவ்வகையில் அடுத்து குடும்பத் தியாகம் எவ்வடிவங்களில் இடம்பெற முடியும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

### 1. கொள்கையை விளங்கல் அல்லது சிந்தனையைப் படித்தல்:

ஒரு கொள்கையின் மாற்றம் எச்சமூகத்தில் பிரயோகிக்கப்படுகின்றதோ அங்கு அதன் மாற்றத்தின் அச்சாணியான குடும்பம் அதன் மாற்றக் கொள்கையை, வழிமுறையை மிகத் தெளிவாக விளங்கியிருக்க வேண்டும். அப்போதுதான் அதற்காக உழைக்கும், முயற்சிக்கும் நிலை அதிகரிக்கும். அப்போது அக்கொள்கை அக்குடும்பத்தின் முதல் இலக்காக மாறும்.

அதாவது சிந்தனையை விளங்கிக் கொள்ள குடும்பத்தின் அனைத்து அங்கத்தவர்களும் அதனை விளங்கும் வகையில் கணவன்-மனைவிக்கும் மனைவி-கணவனுக்கும் பிள்ளைகள்-பெற்றோருக்கும் பெற்றோர்-பிள்ளைகளுக்கும் விட்டுக் கொடுத்து ஒருவர் இன்னொருவரது சுமைகளை, வேலைகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். அவ்வாறாக புரியப்பட்டால் மாத்திரம் தான் குடும்பம் தஃவாவுக்கு பங்களிப்புச் செய்யும் நிலையில் காணப்படும். இல்லாத போது அல்குர்ஆன் கூறுவது போல் ''குடும்

பத்தினர் உங்களுக்குச் சோதனைக்குரியவர் களாக மாறிவிடுவர்.''


அந்நிலையில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் எனின் சிந்தனைப் புரிதல் முக்கிய அம்சமாகும். எனவே முதல் தியாகம் குடும்ப மாக அச்சிந்தனையை விளங்குவதற்கு தங்க ளது நேரம், பணம், முயற்சிகளைச் செலவு செய்வதாகும். அப்போதுதான் ஒவ்வொரு வரும் தங்களது பங்களிப்பை சரியாக மேற்கொள்வர். அபூபக்கர் (ரழி)அவர்களது குடும்பம் இந்த சிந்தனையை மிகச்சரியாக புரிந்ததால்தான் ஒவ் வொருவரும் தங்களது பங்களிப்பை இஸ்லா மிய தூதிற்கு வழங்கினர்.

அவ்வகையில் இன்று நாம் நமது குடும்ப அங்கத்தினர் தங்களது நேரத்ததைத் தியாகம் செய்து ஒவ்வொருவராக அதனைப் படிக்க விளங்க முற்பட வேண்டும். ஒரு செயற்பாட்டின் வெற்றியின் அரை வாசி அதன் பாதையை விளங்குவதில் தங்கியுள்ளது. மாற்றம் குடும்ப மாற் றத்தில் தங்கியுள்ளது எனின் சிந்த னையை குடும்பமாகப் புரிதல் இன்றி யமையாத விடயமாகும்.

எனவே அச்சிந்தனையை தனிநபராக ஒவ்வொருவரும் விளங்கியபோதும் அதன் விளைவை முழுமையாக சமூகத்தில் கண்டுகொள்ள முடியாது. அதனை பிரயோகப்படுத்தும் முதல் இடம் குடும்பமாகும். அந்தவகையில் எப்பொழுது குடும்பம் முழுமையாக அதனை விளங்கியிருக்கிறதோ அப் போது தடையின்றி தனிநபர்களால் தங்களது பணியை மேற்கொள்ள முடி யும். அப்போது சமூக மாற்றத்தின் முழுமை வடிவத்தைக் காண முடியும்.

எனவே இன்றைய நடைமுறை உலகில் இஸ்லாமிய சிந்தனை எவ்வடிவங்களில் வழங் கப்படுகின்றதோ அதனைப் பெற்றுக்கொள் வதற்காக குடும்பம் திட்டமிட்டு தங்களது நேரங்களைப் பயன்படுத்துவதற்கு முயற்சி செய்தல் வேண்டும். அம்முயற்சி அதற்குரிய வடிவத்தில் இடம்பெற்று குடும்பமாக அதனை விளங்கிக் கொள்ள செயற்படல் வேண்டும். இங்கு கணவன் தனது நேரத்தை திட்டமிட வேண்டும். அப்போது மனைவிக்குப் பங்க ளிப்பு வழங்கும் வகையில் அது அமைய வேண்டும்.

இவ்வாறாக மனைவி தனது நேரத்தை திட்ட மிடும்போது கணவனுக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு பிள்ளைகளுக்கு அவர்களது நேரத்தை விட்டுக் கொடுப்புக் களுடன் திட்டமிட்டு அமைத்துக் கொடுக்க வேண்டும். இவ்வாறாக அமையும்போது குடும்பமாக சிந்தனையை விளங்குவீர்கள். அப்போது சிந்தனைக்காக ஒத்துழைப்பு வழங்கும் குடும்பமாக அது காணப்படும்.



**2. தர்பியத்தின் முதற் பாசறையாகத் தொழிற்படல் வேண்டும்:**

சிந்தனை நடைமுறையாக மாற்றப்பட வேண்டும். இங்குதான் குடும்பம் கூடிய கவனம் செலுத்த உள்ளது. அதாவது சிந்தனையின் செயல்வடிவம் ஒவ்வொரு குடும்ப அங்கத்தவர்களிடமும் மாற்றமடை கின்றது என்ற பயிற்சியை வழங்கும் வகையில் குடும்பம் தர்பியத் என்ற பகுதிக்கு தனது

உழைப்பை அதிகரிக்க வேண்டும். அப்போது தனது பல விடயங்கள் இழக்கப்பட்டு இதற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டியளவுக்கு தியாகிக்கும் பண்புள்ள குடும்பமாக வளர்க்க வேண்டும்.

தன் குடும்ப அங்கத்தவர் ஒருவரின் உருவாக்கத்திற்காக ஒருவர் தனது நேரம் பணம் ஆகிய வற்றை இழக்க வேண்டும். தியாகம் செய்ய வேண்டும். ஒரு கணவன் தனது பணம் நேரம் முயற்சி என்பவற்றை தன் மனைவி, பிள்ளைகளின் உருவாக்கத்திற்காக தியாகம் செய்ய வேண்டும். இவ்வாறு மனைவி தனது கணவன், பிள்ளை களின் உருவாக்கத்திற்காக தனது நேரம், முயற்சி, பணத்தை தியாகம் செய்ய வேண்டும். இவ்வாறு குடும்பமாக தியாகிக்க வேண்டும். அப்போது தான் சிறந்த தனிமனிதன் உரு வாக்கப்படுவான்.

**3. குடும்பம் தஃவா எதிர்பார்க்கும் தனி மனித மாற்றத்தை உருவாக்கும் வகையில் தங்களது அங்கத்தவர்களின் பண்புமாற்றம், உருவாக்கம் ஆகியவற்றிற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும்.**

அப்போது ஒருவரது முழு உழைப்பும் பங்களிப்பும் பூரணமாகவும் முழுமையாகவும் விளைவு தரும் வகையிலும் அமைய வேண்டும் எனின் அக்குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர் களது பங்களிப்பு இன்றியமையாத விடய மாகும். இதனை இரண்டாம் தரமாகப் பார்க்க முடியாது. அச்சமயம் அவர்களது ஆசைகள், எதிர்பார்ப் புக்கள், விருப்புக்கள், வெறுப்புக்கள் நிறை வேற்றப்படாத சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

உதாரணமாக: குடும்பத் தலைவர் இஸ்லாமிய தஃவாவிற்காக தனது பணத்தை செலவு செய்ய விரும்புகிறார். அப்போது தனது மனைவியின் விருப்புக்கள், எதிர்பார்ப்புக்கள் இழக்கப்படும். இதுபோன்று பிள்ளைகளது, ஏனையவர்களது ஆசைகள், விருப்புக்கள், எதிர் பார்ப்புக்கள் நிராசையடையும் நிலை தோன் றும். அப்போது குடும்பத்தினர் தியாகிக்க வேண்டி ஏற்படும். இங்கு தியாகிக்க முடியாத நிலை ஏற்பட்டால் தஃவாவின் விளைவு தாமதிக்கும். முழுமையடையாது போய்விடும்.

உதாரணமாக அபூ தஹ்தாஹஹ் (ரழி) அவர்கள் ''நீங்கள் அல்லாஹ்விற்கு அழகிய முறையில் கடனைக்கொடுங்கள்'' என்ற வசனம் இறங்கிய போது தனது தோட்டத்தை தியாகம் செய்தார். அப்போது தனது மனைவியும் பிள்ளையும் அதனை அங்கீகரித் தனர். காரணம் அவர்கள் தியாகம் என்ற பண்பில் உருவாக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறாக குடும்பம் இஸ்லாம் எதிர்பார்க்கும் தனிமனிதர்களை உருவாக்க காத்திரமான பங்களிப்பைச் செய்ய வேண்டும். அதற்கு தியாகம் முக்கிய விடயமாகும். ஒரு தனிநபர் தியாகம் செய்து செலவு செய்வதற்கு குடும்பம் பங்களிப்புச் செய்யும்போது தான் முடியுமாக விருக்கும். இல்லாதபோது உரிய வடிவத்தில் செலவு செய்ய முடியாது போய்விடும்.

உதாரணமாக ஒரு மனிதனிடத்தில் எதிர் பார்க்கப்படும் பணத்தொகையை அவர் உரிய வடிவத்தில் கொடுத்து சிந்தனையை வளர்ச்சி யடையச் செய்ய அவரது மனைவி பங்களிப்புச் செய்ய வேண்டும். பிள்ளைகள் பங்களிப்புச் செய்ய வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் மனைவியும் பிள்ளைகளும் தங்களது தேவைகளை முற் படுத்தும் நிலை தோன்றிவிட்டால் அவரால் அத்தியாகத்தை முழுமையாகச் செய்ய முடியாது போய்விடும்.

இச்சந்தர்ப்பத்தில் அவரால் முழுமையான கூலியைப் பெறமுடியாது. தஃவா அதன் வெற்றிக்கான தேவையை பூரணப்படுத்த முடியாத நிலை தோன்றும். எனவே ஒருவர் தனது உரிய தியாகத்தை வேண்டப்படும் போது வழங்கி பங்களிக்க வேண்டும்.

**4. தஃவாவின் துறைசார் அம்சங்கள் நிறைவேற்றப்பட பங்களித்தல்:**

மற்றுமொரு வகையில் தஃவா வேண்டும் துறைசார்ந்த விடயங்களில் தியாகித்தல் இன்றியமையாத விடயமாகும். சில சந்தர்ப்பங் களில் தஃவா ஒருவரை முழு நேரமாக தொழிற் பட அழைக்க முடியும். இன்னொருவரை குறிப்

பிட்ட சந்தர்ப்பத்தில் முழுமையாக உயிர்த் தியாகங்களுடன் அழைக்கின்றது. இன்னொரு வரை அறிவுத்துறையில் பங்களிப்புச் செய்யும் படி அழைக்கின்றது. இவ்வாறாக பல்வேறு வடிவங்களில் தஃவா அழைக்கும் போது அவர்கள் தங்களது பங்களிப்பைச் செய்வதற்கு குடும்பத்தின் பங்களிப்பு முக்கியமானது.

அச்சமயத்தில் குடும்பம் குறிப்பிட்ட நபர்களை அதற்காக அர்ப்பணிக்க முன்வர வில்லையெனில், தஃவாவின் தேவை பூரணப்படுத்தப்படாத நிலை தோன்றும். வெற்றி தாமதமடையும். உரியவர்கள் உரிய பங்களிப்பைச் செய்யாது பொருத்தமற்றவர்கள் பல தேவைகளையும் வெற்றிடங்களையும் நிரப்ப வேண்டிய சூழல் உருவாகும். இதனால் சீர்திருத்தப் பணி சீர்குலையும் நிலை தோன்றும். இதில் இருந்து பாதுகாத்து தூதின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்ய இவ்வகைத் தியாகத்தையும் குடும்பம் செய்ய வேண்டும்.

இதோ அபூ பக்ர்(ரழி) அவர்களது குடும்பம். அல்லாஹ்வின் தூதர் தன்னை தோழராக அழைத்தபோது தனது மனைவி, பிள்ளைகளை தியாகித்து அவர்கள் அப்பங்களிப்புக்கு ஒத்துழைத்தனர். ஹிஜ்ரத்தின்போது அவர்களது மகளான அஸ்மா (ரழி) அவர்களிடம் கேட்கப்பட்ட உதவியை தாயும் தந்தையும் தியாகித்ததால் வழங்க முடியுமாயிருந்தது. இதோ மகன் அப்துர் ரஹ்மான் ஹதீஸ்களை அறிப்பதற்காக அதிக நேரம் நபியவர்களுடன் கழிக்க வேண்டியேற்பட்டது. இது தந்தையினதும் தாயினதும் சகோதரியினதும் தியாகத்தின் விளைவுகளாகும். குடும்பமாக அபூபக்ர் (ரழி) அவர்களது குடும்பம் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கும் தஃவாவின் பரவலுக்கும் தியாகித்து பங்களித்துள்ளனர்.

### 5. சமூகத்தில் முன்மாதிரியான குடும்பமாக பிரதிபலித்தல்:

அதாவது சமூகப் புனரமைப்பில் குடும்பம் முக்கிய அச்சாணி என்றவகையில் குடும்பங்கள் முன்மாதிரி மிக்கதாகக் காணப்பட வேண்டும். குடும்பம் சிறந்த ஒழுக்க விழுமியங்கள், பண்பாடுகள், சிறந்த நடத்தைகள், செயற்பாடுகள்



மிக்க குடும்பமாக திகழ வேண்டும். அதேநேரம் ஹராம்களைத் தவிர்க்க வேண்டும். மோசமான பண்பாடுகள் நடத்தைகளில் இருந்து குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டும்.

சமூகத்தின் பார்வையில் விமர்சிக்கப்படாத நிலமையில் குடும்பம் காணப்படல் வேண்டும். ஆடம்பர வாழ்வில் இருந்து தவிர்ந்து வாழ வேண்டிய சூழல் ஏற்படும். அப்படியெனில், பல விடயங்களில் குடும்பமாக தவிர்ந்து விட்டு நடக்க வேண்டிய தேவை ஏற்படும்.

இங்கு பொறுமையும் சகிப்புத் தன்மையும் மிக அதிகமாகத் தேவைப்படும். இங்கு பொறுமையைக் கைக்கொள்ள தியாகம் மிக அத்தியவசியமானதாகும். நபி இப்ராஹீம் (அலை) அவர்களது குடும்பம் இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும். அல்குர்ஆன் இதனால்தான் நரக நெருப்பில் இருந்து தன்னையும் தனது குடும்பத்தினரையும் பாதுகாக்கச் சொன்னது.

''விசுவாசிகளே! உங்களையும் உங்களது குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுங்கள்.'' *(தஹ்ரீம்-06)*

எனவே சமூகப் புனரமைப்பு, இஸ்லாமிய தூதின் பரவல், வளர்ச்சிக்கு தனிநபர் தியாகம் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறதோ இதே யளவிற்கு குடும்பத்தியாகமும் அவசியமானது என்பதை நாம் புரிந்து செயற்பட வேண்டும். அப்போதுதான் இரு வழிகளும் பயணிக்கும் போது சீரான, சிறந்த வெற்றி கிடைக்கும். அதற்கு இறைவன் துணைபுரிவானாக!

# முகமலர்ச்சியுடன் நல்ல வார்த்தை பேசுவது



அஷ்ஷெய்க் ரஷாத் மர்ஸூக்
rashadmal@gmail.com



பேச்சுத் திறன் என்பது மனிதனுக்கு அல்லாஹ் கொடுத்திருக்கின்ற பரிசுகளில் ஒன்றாகும். இந்தப் பேச்சை உலகில் சிலருக்கு கொடுக்காமல் பலருக்கு கொடுத்திருக்கின்றான். இது மக்களில் யார் சிறந்த அமல் செய்கின்றார்கள் என்பதை அவதானிப்பதற்காகவே அல்லாஹ் இவ்வாறு செய்திருக்கிறான்.

மறுமையில் பேச்சுத் திறன் கொடுக்கப்பட்ட மனிதனுக்கும் பேச்சுத்திறன் கொடுக்கப்படாத மனுதனுக்குமான கேள்வி ஒன்றாக இருக்காது. இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் மனிதன் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் பெறுமதி இருக்கின்றது. எனவே பேசுவதற்கு முன்னால் சிந்தித்து பேச வேண்டும்.

அந்த வகையில் பேச்சை, வார்த்தைகளை சரியாக பயன்படுத்த வேண்டும். நாம் பேசுகின்ற வார்த்தைகளுக்கு மற்றவர்களைக் காயப்படுத்தும் சக்தியும் காயத்தை ஆற்றும் சக்தியும் இருக்கின்றது. நாம் நம் வாழ்நாள் முழுவதும் பேசுகின்ற வார்த்தைகள் அனைத்தும் பதியப்படுவதாக அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

''மனிதன் மொழிகின்ற ஒவ்வொரு வார்த்தையும் கண்காணித்து எழுதப்படுகின்றது'' (அல்குர்ஆன் *50:18*)

நாம் எங்கு மறைந்து யாரும் காணாமல் இரகசியமாக மொழிந்தாலும் அல்லாஹ் அறிகின்றான். எனவே இதுவரை நாம் வாழ்க்கையில் பேசிய அனைத்தும்

யாரோடு பேசியிருந்தாலும் அவை அனைத்தும் பதியப்பட்டிருக்கின்றன. மேலும் மறுமைவரை யார் யாரெல்லாம் பேசுவார்களோ அந்த ஒவ்வொரு வார்த்தையும் பதியப்படும்.

நாம் செய்கின்ற நற்காரியங்கள் எவ்வாறு அல்லாஹ்விடம் செல்கின்றதோ அதேபோல் நாம் பேசும் வார்த்தைகளும் அல்லாஹ்விடம் செல்கின்றன. நாளை மறுமையில் அவை வெளியாக்கப்படும். எனவே பேசுகின்றபோது நல்ல வார்த்தைகளை நாம் பேசினால் இவ்வுலகிலும் மறுமையிலும் நாம் வெற்றி பெற முடியும்.

எமது நாவினால் நாம் ஒரு வார்த்தையை வெளிப்படுத்தினால் அதனை மீண்டும் மீளப் பெற முடியாது. வார்த்தைகள் மற்றமனிதர்களை ஒருபோதும் புண்படுத்தக் கூடாது. கடுமையான நாகரிகமற்ற பேச்சுக்கள் பிரச்சினைகளை, சண்டைகளை உண்டுபண்ணுகின்றன. நல்ல வார்த்தை மனிதர்களை வாழவைக்கும். முரண்பாடுகளிலிருந்து பாதுகாக்கும். துன்புற்றவர்களுக்கு ஆறுதலளிக்கும். பயனற்ற பேச்சை பேசுவதை இஸ்லாம் தடைசெய்கின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ''யார் அல்லாஹ்வையும் மறுமையையும் ஈமான் கொண்டிருக்கின்றாரோ அவர் பேசினால் நல்லதைப் பேசட்டும். அல்லது வாய் மூடி இருக்கட்டும்.'' *(புஹாரி, முஸ்லிம்)*

நாம் அல்லாஹ்வை ஈமான் கொண்டிருந்தால் நல்ல வார்த்தை பேசுகின்றவர்களாக இருக்க வேண்டும். ஒருவர் தீய வார்த்தை அல்லது கெட்ட வார்த்தை பேசுகின்றாரென்றால் அவர் இன்னும் அல்லாஹ்வை, மறுமையை சரியாக ஈமான் கொள்ளவில்லை என்பதையே குறிக்கும். அவரது ஈமான் தீய வார்த்தைகள் பேசும் காலமெல்லாம் குறை ஈமானாகவே இருக்கும்.

நபி (ஸல்) அவர்கள் நல்ல வார்த்தைகள் பேசக்கூடியவராக இருந்ததன் காரணமாகவே அவரை மக்கள் ஏற்றுக் கொண்டனர். அவர் கடுகடுப்பான முகத்தையும் வார்த்தையையும் பயன்படுத்தியிருந்தால் மக்கள் அவரை விட்டும் விரண்டோடியிருப்பர்.

அதனையே அல் குர்ஆன் ''நீர் கடுமையானவராகவும் கடுகடுத்த உள்ளம் கொண்டவராகவும் இருந்திருந்தால் அவர்கள் உம்மை விட்டு விலகிச் சென்றிருப்பர்'' *(3:159)*

''நிச்சயமாக நீங்கள் மகத்தான குணத்தில் இருக்கின்றீர்கள்'' *(68:4)*

நாம் செய்கின்ற தஃவா வெற்றிபெற வேண்டுமாக இருந்தால் நாம் நல்ல வார்த்தைகள் பேசுகின்றவர்களாகவும் நல் உள்ளம் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

நல்ல வார்த்தையை பேசுவதானது, ஒருவர் தனது செல்வத்தை தர்மம் செய்வதை ஒத்தது என இஸ்லாம் குறிப்பிடுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ''நல்ல (இனிய) சொல்லும் தர்மமாகும்'' *(புஹாரி)*

தர்மத்தின் நன்மையை அழகான வார்த்தை பேசுவதனூடாக பெற்றுக் கொள்ளமுடியும். பணத்தால் மாத்திரமே தர்மம் செய்யமுடியுமென்பதல்ல.

நாம் சுவர்க்கத்தை இந்த நல்ல வார்த்தையினூடாக பெற்றுக் கொள்ளலாம். அதேபோல் நல்ல வார்த்தைகளினூடாக நரகத்திலிருந்து பாதுகாப்பு பெற்றுக் கொள்ளவும் முடியும். நபி (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு ஒருவர் வந்து தனக்கு சுவர்க்கத்தைப் பெற்றுத் தரக்கூடிய ஒரு அமலை கற்றுத் தருமாறு கேட்டார். அதற்கு நபியவர்கள், ''ஸலாத்தைப் பரப்புங்கள். நல்ல வார்த்தைகளைப் பேசுங்கள். உறவுகளை இணைத்துக் கொள்ளுங்கள். மக்கள் உறங்கும் போது இரவில் நின்று வணங்குங்கள். சாந்தியுடன் சுவர்க்கத்தில் நுழைவீர்கள்'' *(அஹ்மத்)* என்று கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பேரீத்தம் பழத்தின் ஒரு துண்டை தர்மம் செய்தேனும் நரகத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். அல்லது நல்ல வார்த்தைகளைக் கொண்டாவது (பாதுகாத்துக் கொள்ளுங்கள்)''. *(புஹாரி)*

சுவர்க்கத்தை பெறவும் நரகத்திலிருந்து



பாதுகாப்புப் பெறவும் இலகுவான ஒரு நற்காரியமாக நல்ல வார்த்தை பேசுதல் காணப்படுகின்றது.

பாதையோரங்களில் இருந்து பேசிக்கொண்டிருப்போர் நல்ல வார்த்தையையே பேச வேண்டும் என்றும் அவ்வாறு நல்ல வார்த்தை பேச முடியாவிட்டால் அமரக்கூடாது என்றும் இஸ்லாம் கட்டளையிடுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ''பாதையோரங்களில் அமர்வதாக இருந்தால் அதற்குரிய உரிமைகளைக் கொடுத்து விடுங்கள். பார்வையைத் தாழ்த்துவதும் ஸலாமிற்குப் பதிலளிப்பதும் நல்ல வார்த்தைகள் பேசுவதும் (அதற்குரிய உரிமையாகும்) என்றார்கள். (முஸ்லிம்)

இன்று பலர் தீய விடயங்களைக் கதைப்பதற்காகவும் பாதையில் செல்கின்றவர்களை குழப்புவதற்காகவும் அந்நியப் பெண்களைப் பார்ப்பதற்காகவும் பாதையோரங்களில் அமர்ந்து கொண்டிருக்கின்றனர். பாதையில் அமர்வதாக இருந்தால் அதற்குரிய உரிமைகளைக் கொடுக்க வேண்டும். குறிப்பாக பெண்கள் மாலை நேரத்தில் வீடுகளுக்கு முன்னால் ஒன்றுகூடி அதிகமாக தீய விடயங்களைப் பேசுவது கவலைக்குரிய விடயமாகும். இவை தவிர்க்கப்பட வேண்டும்.

நல்ல வார்த்தை பேசுகின்றபோது எமது முகம் மலர்ந்திருக்க வேண்டும். முகமலர்ச்சி என்பது ஒரு நன்மையான காரியமாகும்.

நபியவர்கள் கூறினார்கள். ''நீர் நற்காரியங்களில் எதனையும் இழிவாகக் கருதவேண்டாம். நீர் உனது ஒரு சகோதரனை மலர்ந்த முகத்துடன் சந்திப்பதாயினும் சரியே'' (முஸ்லிம்)

இன்று பல விடயங்களை சிறிதாக பார்த்து அதன் நன்மைகளை நாம் இழங்துவிடுகின்றோம். நன்மையான காரியங்களை சிறிதாக காட்டும் விடயத்தில் ஷைத்தான் வெற்றிபெற்றுள்ளான். இந்த ஷைத்தானை புறக்கணிக்கின்ற வகையில் நாம் ஏனையவர்களுடன் முக மலர்ச்சியுடன் சந்திப்பதை எம்மில் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

நல்ல வார்த்தை என்கின்றபோது அதில் நல்ல நோக்கம் இருக்க வேண்டும். நல்ல நோக்கம் இல்லையென்றால் பேசாமலிருப்பதே மேலானது. நல்ல வார்த்தை பேசுவதாகச் சொல்லி அது தர்க்கம் புரிவதாக மாறக்கூடாது. அதில் பொய் கலக்கக் கூடாது. மற்றவர்களின் உள்ளத்தை நோகடிக்கும் பேச்சாகவும் இருக்கக்கூடாது. மற்றவர்களை ஏசுவதாகவும் குழப்புவதாகவும் கிண்டல் செய்வதாகவும் அவை இருக்கக்கூடாது.

மாறாக உள்ளத்திற்கு புத்துணர்ச்சி அளிக்கக் கூடியதாக நல்ல வார்த்தை இருக்கவேண்டும். மற்றவர்களின் மனதைக் காயப்படுத்துவதாக இல்லாமல் காயத்தை ஆற்றும் விதமாக பேசப் பழகிக்கொள்ள வேண்டும். எமது நாவை நாம் முழுமையாக அடக்க முடியாவிட்டாலும் அதனை நல்ல விதத்தில் பயன்படுத்த முயற்சிக்க முடியும்.

அந்தவகையில் நமது நாவை நாம் பயிற்சிக்குட்படுத்த முடியும். நாவினால் நல்ல விடயங்களை அதிகமாக செய்கின்றபோது அந்தப் பயிற்சி சாத்தியப்படும். அதாவது அதிகமாக ஸலாம் சொல்வது, அதிகமாக குர்ஆன் ஓதுவது, திக்ருகளில் ஈடுபடுவது, நபியவர்கள் மீது ஸலவாத் சொல்வது, நன்மையை ஏவி தீமையை தடுப்பது, தனக்குத் தெரிந்த ஒரு விடயத்தை பிறருக்கு கற்றுக் கொடுப்பது, நல்லவர்களை உரியமுறையில் பாராட்டுவது போன்ற நல்ல வார்த்தைகளினால் எமது நாவை பயிற்சிக்குட்படுத்தி மறுமையில் சுவனத்தையும் நரகத்திலிருந்து பாதுகாப்பையும் பெற அல்லாஹ் எமக்கு அருள்புரிவானாக.

# செயற்திறனுள்ள தலைமைத்துவம்

## - ஓர் இஸ்லாமிய நோக்கு



அஷ்ஷெய்க் யூ.கே. றமீஸ் (நளீமி)
M.A. (சமூகவியல்)
விரிவுரையாளர், பாதிஹ் கல்வி நிறுவனம்
ukrameez@gmail.com

ஆரம்பமாக நிறுவனங்கள், அமைப்புக்கள், இயக்கங்கள் பொதுவாக எதிர்கொள்ளும் பிரச்சினைதான் தலைமைத்துவமாகும். இதன் விளைவை எல்லா பாத்திரங்களிலும் காண்கின்றோம். ஒரு தலைவர் நிறைவேற்ற வேண்டிய பணிகள். அவரது பங்குகள்தான் இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றது. தலைமைத்துவம் என்ற சொத்தை நிறுவனங்களும், அமைப்புகளும் தொலைத்துள்ளன. ஒரு சாதாரண பெரிய சனத்திரள் செய்யாத வேலையை ஒரு தலைவன் செய்கிறான்.

### *01. தலைமை, தலைமைத்துவம் என்றால் என்ன?*

அனைவருக்கும் பின்னால் இருந்த செலுத்து பவர் அல்ல தலைவர். முன்னாலிருந்து இழுத் துச் செல்பவரே தலைவராவார். இவ்வகையில் சில விடயங்களை நோக்குவோம்.

I) **தலைவர்:**

சில வரையறுக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காக தன்னை சூழ இருக்கும் தனி மனிதர்களின் நடத்தையிலும் சிந்தனை போக்கி லும் செல்வாக்கு செலுத்துபவரே தலைவரா வார். இவர் தன்னை வழிநடாத்திக் கொள்ள முடியுமானவராய் இருப்பார். தன்னை கட்டுப் படுத்த முடியாதவர் எப்படி பிறரை வழிகாட்டப் போகின்றார். அவரது ஆற்றல் எந்தளவு பூரண மடையுமோ அந்தளவு தலைமைத்துவ செயற் பாடும் விரிவடையும்.

இதனைத்தான் அல்லாஹ் இப்றாஹீம் (அலை) என்ற தலைவரை புகழ்ந்துரைத்து ''நிச்சயமாக இப்றாஹீம் (அலை) ஒரு சமூக மாக, உள்ளச்சத்தோடு அல்லாஹ்வுக்கு கட்டுப் படுவராக, அசத்தியத்திலிருந்து தூரமானவராக இருந்தார். அவர் அல்லாஹ்வுக்கு இணை வைக் கின்ற ஒருவராக இருக்கவில்லை. அத்தோடு அவர் அருள்களுக்கு நன்றி செலுத்துபவராக இருந்தார்.'' *(நஹ்ல்: 120,121)*

II) **தலைமைத்துவம்**

இதுதான் தலைவருக்கும் பின்பற்றுவோ ருக்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்தும் பாலமாகும். தலைவர்கள் தலைமைத்துவம் மூலம்தான் பின்பற்றுகின்றவர்களின் சிந்தனை யிலும் நடத்தையிலும் செல்வாக்கு செலுத்தி

நிறுவன இலக்குகளும், தனிமனித இலக்கு களும் நிறைவேறும் விதமாக இயங்குகின்றனர். இந்த இணைப்பு பணியை செய்வதற்கான பண்புகள், திறன்கள்தான் தலைமைத்துவ திறண்கள் (Leadership Skills)எனப்படுகிறது.

இதனைத்தான் உமர் இப்னு அப்தில் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ''அறிந்து கொள்ளுங்கள். நிச்ச யமாக நான் உங்களைவிட சிறந்தவனல்லன். எனினும் நான் உங்களில் ஒருவன். எனினும் அல்லாஹ் உங்களை விட அதிக சுமையை சுமக்க வைத்துள்ளான்'' என்கிறார்கள்.

எனவே, தலைமைத்துவம் என்பது ஒரு பொக்கிஷமல்ல. இதனை வைத்து இன்பம் காண முடியாது. இங்கு கிடைக்கும் புகழ் வார்த்தைகளில் மயங்க முடியாது. மாற்றாக இது ஒரு பொறுப்பு ஆகும்.

III) நிர்வாக தலைமைத்துவம்

வரையறுத்த இலக்குகளை அடைவதற்காக வழிகாட்டல்கள், நிர்வாக செயற்பாடுகள் மூலம் நிறுவனத்தில் இருக்கின்ற ஒரு குழு வினரை இணைக்கின்ற செயல்பாடு நிர்வாக தலைமைத்துவம் எனப்படும். இங்கு சில விடயங்கள் அவசியமாகும்.

a) தர்க்கம் ஏற்படுத்தல்

வரையறுக்கப்பட்ட இலக்குகளை அடை வதற்காக அடுத்த மனிதர்களில் திருப்தியை அல்லது மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஆற்றல்.

b) செல்வாக்கு செலுத்தல் (Influence)

ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற் கான அல்லது ஏற்படுத்தும் ஒரு விடயத்தை தடுப்பதற் கான ஆற்றலை குறித்து நிற்கிறது. இது முன் மாதிரியுடன் தொடர்பான ஒரு விடயமாகும்.

c) சட்ட ரீதியான அதிகாரம் (Authority)

கட்டுப்பட வைப்பதற்கும் செயல்படுவதற் கும் ஒரு தலைவருக்கு வழங்கப்படும் அதி காரம்.

இதன்படி கீழ்வரும் முடிவுகளுக்கு வர முடியும். தலைமைத்தும் என்று பேசும்போது

1. இலக்கு காணப்படவேண்டும்.
2. தனிமனிதர்கள் கொண்ட குழுக்கள் (Groups) காணப்படல் வேண்டும்.
3. பொருத்தமான நேரத்தில் சரியான முடி வை எடுக்கக் கூடிய, நிர்வாக சிந்தனை யுள்ள, தாக்கம் ஏற்படுத்தும் விதமான தலைவர் இருக்க வேண்டும்.

## 02. தலைமைத்துவத்தின் முக்கியத்துவமும் அதன் அவசியமும்

மானுட சமூகத்திற்கு தலைமைத்துவம் மிக அவசியமான ஒரு விடயமாகும், இதனூடாக வாழ்வை ஒழுங்குபடுத்தலாம். நீதியை நிலை நாட்டலாம். பலவான் பலவீனனை சாப் பிடும் நிலையை தடுத்து நிறுத்தலாம். ஒட்டுமொத்த மாக கூறினால் இது வாழ்வின் மிக முக்கிய அம்ச மாகும். ஜாலூத் என்ற மோசமான தலைவனை தாலூத்



என்ற படையிலிருந்து தாலூத் (அலை) என்ற தலைவன் வீழ்த்திய வரலாற்றை அல்குர்ஆன் 2:120 இல் குறிப்பிடுகின்றான். ''மனிதர்களில் சிலரைக் கொண்டு சிலரை அல்லாஹ் தடுக்கா விட்டால் பூமி அழிந்திருக்கும்'' என்கிறான்.

எனவே, தலைமைத்துவம் என்பது மிக முக்கியமானது. பரந்த சிந்தனைகளும் பெரும் ஆற்றல்களும், புத்தாக்கமும் இங்கு தொடர்புபடுகிறது. தீர்க்கமான முடிவுகளை துணிந்து எடுப்பதற்கும், ஒழுங்குகளை பேணிக்கொள்ளவும் இது மிக அவசியமானது. எனவேதான் பிரான்ஸிய தளபதி நெபோலியன் பொனபாட் ''பல முயல்கள் கொண்ட ஒரு படையை ஒரு சிங்கம் வழிநடாத்துவது பல சிங்கங்கள் கொண்ட படையை ஒரு முயல் வழிநடாத்துவதை விட சிறந்தது'' என்கிறார்.

i) ஒரு நிறுவனத்தின் செயற்பாட்டாளர்களையும் நிறுவனத்தின் எதிர்கால திட்டங்களையும் இணைக்க தலைமைத்துவம் அவசியமாகும்.

ii) நிறுவனத்தின் அனைத்து விவகாரங்களும், உபாயங்களும் தகவல்களும் தேங்குமிடம் தலைமையாகும்.

iii) எதிர்கால திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட தலைமை அவசியமாகும்.

iv) நிறுவனத்திலுள்ள சாதக நிலைகளை (Positive Points) மேம்படுத்தி பாதக நிலைகளை (Negative Points) குறைக்க தலைமை அவசியமாகும்.

v) நிறுவனத்தில் தோன்றும் பிரச்சினைகளை தீர்க்க தலைமை தேவைப்படுகிறது.

vi) நிறுவன அங்கத்தவர்களை பயிற்றுவித்து அவர்களைமேம்படுத்ததலைமையொன்று அவசியமாகிறது.

viii) சூழ்நிலை மாற்றங்களை கருத்தில் கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் தலைமை தேவைப்படுகிறது.

## 03. செயற்திறன்மிக்க தலைவரின் பண்புகளும் திறன்களும்

சில மனிதர்கள் உயர்பதவிகளில் இருப்பார்கள். ஆனால், அவர்களிடம் தலைமைத்துவ பண்புகள் காணப்பட மாட்டாது. உண்மையில் தலைவனின் செயற்திறன் அவனுக்கு (தெரிவு மூலம் / நியமனம் மூலம்) கிடைக்கும் அதிகாரத்திலும் பின்பற்றுபவர்களின் அங்கீகாரத்திலும், அவனது திறன்கள் பண்புகளிலும்தான் தங்கியுள்ளது.

**I. செயற்திறன் மிக்க தலைவனின் முக்கியமான பண்புகள்.**

a) **இயல்பான பண்புகள்:** விவேகம் / வீரம் / கொடை / உறுதி / உண்மை / பணிவு/ நீதி / மன உறுதி / வாக்கை நிறைவேற்றல்.

b) **ஆளுமைப் பண்புகள்:** (தன்னில் ஏற்படுத்த முடியுமான பண்புகள்) ஈமான் / அறிவு / உளக்கட்டுப்பாடு / பொறுப்புணர்வு / துணிவு

c) **சமூகப் பண்புகள்:** அடுத்தவர்களுடன் உறவாடும்போது தேவையான பண்புகள். மென்மை/ இங்கிதம் / நீதி / சமத்துவம் / கலந்துரையாடல் / இணைந்து பணியாற்றல் / மன்னிப்பு / கோபத்தை அடக்குதல் / உபதேசங்களை ஏற்றல் / சிறந்த நட்பு தெரிவு.

**II. செயற்திறன் மிக்க தலைவரின் திறன்கள்.**


a) **சிந்தனை ரீதியான திறன்கள்:** (அறிவு ரீதியானவை) சிந்தனை / திட்டமிடல் / புத்தாக்கம் / கருத்து வெளியிடப்படுத்தும் ஆற்றல்.

b) **சமூக அல்லது மானுட திறன்கள்:** மானுட தொடர்புகள் / செவிமடுத்தல் / தூண்டல்கள் (motivation)

c) **கலை அல்லது துறைசார் பண்புகள்:** ஒழுங்குபடுத்தல் (organising) தொடர்தல் (follow up) தீர்மானமெடுத்தல் (Decision making) பிரச்சினை தீர்த்தல் (Problem solving)

## அல்-முன்தலக் (தஃவா யாத்திரை) 44

# உளப் போராட்டமே களப் போராட்டம்




ஷெய்க் முஹம்மத் அஹ்மத் ராஷித்



தமிழில்: ஷெய்க் மிஹ்ழார் எம். ரஷீத்
mihilarmrm@gmail.com


**தஃவாக் கட்டமைப்பு நடை முறை செயற்களத்தில் எதிர்நோக்கும் கடினமான விடயமாகும். ஏனெனில், சிக்கல்களும் முரண்பாடுகளும் நிறைந்த மனித உள்ளங்கள் தான் தஃவா மேற்கொள்ளப்படும் போராட்டக் களமாகும்.**



இஸ்லாமியப் பிரச்சாரகன் நடைமுறை உலகில் பளிங்குப் பாறைகளுடனோ, பரிசுத்தமான மலக்குகளுடனோ உறவாடுபவன் அல்ல!

அவன் மனித உள்ளங்களோடு தான் ஒட்டி உறவாடுகிறான். அந்த உள்ளங்களோ விதவிதமான இயல்புகளை சுமந்திருக்கும் அந்தரங்கச் சுரங்கங்களாகும். நிலைத்திருத்தல் மீதான தணியாத ஆசை, அதிகம் அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்ற வேட்கை, தீராத பாலியல் மோகம் போன்ற இயல்பூக்கங்கள் உள்ளங்களில் உண்டு. அதேபோன்று பழிவாங்குதல், எச்சரிக்கை, கொண்ட கொள்கை யைப் பாதுகாத்தல், அதனைப் பரப்பும் வேட்கை போன்ற உணர்வுகளும் அவற்றில் காணப்படும்.

இவ்வாறான இயல்பூக்கங்கள், உணர்வுகள், மையங்கள் மற்றும் வேட்கைகளின் கூட்டுச் சேர்மானம் தான் இஸ்லாமியப் பிரச்சாரகனுக்கு முன்னால் இருக்கும் சமூகம் என்ற கட்டமைப்பாகும். உணர்வுகள், இயல்பூக்கங்கள், இயல்புகள் என்பவற்றின் சேர்க்கையான ''சமூகம்'' என்ற சுரங்கத்தின் நுழைவாயில்களை சரியாக அறியாது அதில் நுழையும் இஸ்லாமியப்



பிரச்சாரகன் நிச்சயமாகத் தோல்வியை தவிர்க்க முடியாமல் சந்தித்தே தீருவான். இந்த உணர்வுகளையும் இயல்பூக்கங்களையும் மதிக்காது புறக்கணித்து நடப்பதால் சமூகத்தின் இருப்புக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. மாறாக சமூகத்தில் நுழையும் இஸ்லாமியப் பிரச்சாரகன் தான் தீங்குக்கு இலக்காகுவான்.


இறுதியில் அந்த உணர்வுகளின் சுரங்கமான சமூகம் நிலைத் திருக்கும். ஏனெனில், இறை அனுமதியோடு அது நிலைத்திருக்கவே உருவானது. ஆனால் அந்த சமூகத்தின் இயல்புக்கு முரணாக செயற்பட்ட இஸ்லாமியப் பிரச்சாரகன்தான் தோல்வியடைந்து வெளியேற வேண்டிய நிலை உருவாகும். ஏனெனில், அச்சமூகத்தை அதன் வளைவு - நெளிவுகளுடன் மட்டிடுவதில் அந்தப் பிரச்சாரகன்தான் கோட்டை விட்டுள்ளான்.

நவீன புராதன வரலாற்று நெடுகிலும் தோன்றிய சமூகப் புரட்சிகள் அரசியல் மாற்றங்கள் அனைத்தினதும் அடித்தளமாகவும் களமாகவும் இருந்திருப்பது மனித உள்ளங்களாகும். அவைகள் ஒன்றில் சோற்றுக் கவளத்தைப் பெற்றுக் கொள்ளல் அல்லது பாலியல் இச்சைகளைத் தீர்த்தல், அல்லது சுகபோக வாழ்வை அனுபவித்தல் போன்றவற்றை பின்னணிக் காரணியாகக் கொண்டே அந்தப் புரட்சிகள் வெடித்தன. அல்லது அவை தங்களது நிலத்தை ஆக்கிரமித்த அல்லது தங்களது பெண்களைக் கவர்ந்து சென்றவர்களுக்கு எதிரான பழிவாங்கும் தூண்டுதலினால் வெடித்த புரட்சிகளாகவும் இருக்கலாம். அல்லது கொள்கைகளைப் பரப்புவதை அல்லது அக்கொள்கைக்கு எதிரானவர்களை அடக்கி ஒடுக்குவதைப் பின்னணியாகக் கொண்டு வெடித்த புரட்சிகளாகவும் இருக்கலாம். பெறுமானங்கள், ஒழுக்க விழுமியங்கள் மற்றும் சத்தியம் அல்லது அசத்தியத்தைப் பிரதிபலிப்பதாக இந்தக் கொள்கைகள் அமையலாம்.

இவ்வாறாக சடவாத மற்றும் மானசீகத் தூண்டுதல்கள் இணைந்தோ தனித்தோ இந்தப் புரட்சிகள் வெடிப்பதற்கான காரணிகளாக அமைந்துள்ளன. இயல்புகள், இயல்பூக்கங்களின் விளைவாக உருவாகும் மனித நடத்தைக் கோலங்களை நெறிப்படுத்தி பிறரை வழிப்படுத்தும் திறனையும் சிலர் கொண்டிருப்பர். அவர்கள் மேற்கொள்ளும் பணியையே நாம் ''தர்பிய்யா'' - நெறிப்படுத்தல், பயிற்றுவித்தல் எனக் குறிப்பிடுகிறோம். யுத்தங்களும் அரசியல் போராட்டங்களும், உளப்போராட்டங்களின் பிரதிபிம்பங்களே!

## நேற்றைய தஃவாக் கள விரிவாக்கத்தில் வரையறை பேணாமையும் இன்றைய சமநிலை நகர்வின் தேவையும்

ஆக எமது போராட்டமே தர்பிய்யத் போராட்டம் தான். அதாவது பயிற்றுவிப்பாளரான முரப்பி எந்தளவு கச்சிதமாகவும், ஆழமாகவும் தர்பிய்யத் வழங்குகிறாரோ அந்தளவுக்கு அந்தப் போராட்டத்தின் அக்கினிச் சுவாலைகள் பலமாக சுடர்விட்டுப் பிரகாசிக்கும். அவர் அதனை மேற்போக்கான முறையில் வழங்கும் பொழுது அதன் சுவாலைகள் சுடர் இழந்து விடும்.



அதாவது வரையறுத்த எண்ணிக்கையிலான தர்பிய்யத் வழங்கும் முன்னோடிகள், குறைந்த தொகையிலான மாணவர்களுக்கு முனைப் படுத்தி தர்பிய்யத் வழங்கும் பொழுது அதன் தாக்கம் ஆழம் மிக்கதாக அமையும். பின்னர் மாணவர்களின் தொகை அதிகரிப்பு இயல்பான களவிரிவாக்கத்திற்கு ஏற்றதாகவும் அமைய வேண்டும். இயல்பை மீறிய முறையற்ற எண் ணிக்கை அதிகரிப்பால் தர்பிய்யத்தின் தாக்கம் மேற்போக்காக அமைவதோடு, நாளடைவில் சடைவு பெற்றுவிடும். நாளடைவில் தாக்கத் தின் பரிமாண அளவு தஃவாக் கட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு மத்தியில் வீழ்ச்சியை நோக்கி செல்லும். இதனால் எதேச்சையான உந்துதல்கள் அவர்களுக்கு மத்தியில் உருவாகி தஃவாக் கட்டமைப்பின் இலக்கை நோக்கிய போக்கைத் திசை திருப்பி விடும். இதனால் உட்பூசல்களும் சிக்கல்களும் உருவாகும்.

எனவே, தஃவாக் கட்டமைப்பானது வளர் ந்து வரும் பருவத்தில், அதன் முன்னோடிப் பயிற்றுவிப்பாளர்கள் எதேச்சையாக உந்தப் பட்டு அவர்களது சக்தியை விஞ்சும் அளவு மாணாக்கர்களை தர்பிய்யத் பெறுவதற்கு உள் வாங்காதிருப்பது தான் எமது தர்பிய்யாப் போராட்டத்திற்கான அனுகூலமாக அமையும். பிற்பட்ட காலத்தில் தகவல் ஊடகங்கள் சஞ்சி கைகள் ஒலி - ஒளி நாடாக்கள் மற்றும் நூல்கள் ஊடாக தர்பிய்யத்தின் தாக்கமானது பரவலாகு வது உறுதிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில்தான் தர்பியாவிற்கு உள்வாங்குவோரின் எண்ணிக்கை யில் விரிவு ஏற்பட வேண்டும். இக்கட்டத்தில் தஃவாக் கள முன்னோடிகளாக விளங்கும் சில பிரபல பேச்சாளர்களும் சிந்தனையாளர்களும் மற்றும் கதீப்மார்களும் பரவலான சிந்தனை விரிவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்யலாம்.

எனவே், எதேச்சையான உந்துதல்களின் ஊடாக வரும் உட்பூசல் கள், சிக்கல்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்காக இரண்டாவது தீர்வி னையே நாம் மேலே விளக்கினோம்.

இஸ்லாமிய இயக்கத்தின் மிகக் கிட்டிய வர லாற்றை உற்று நோக்கினால், தரமானவர்களை விடவும் எண்ணிக்கையில் அதிகமானவர்கள் உள்வாங்கப்பட்டிருப்பதைக் காணலாம். இத னால் இஸ்லாமிய இயக்கம் நிறைய சிக்கல் களையும் உட்பூசல்களையும் எதிர்நோக்க வேண்டி இருந்தது. இன்றைய இஸ்லாமிய தாஈக்கள் இதிலிருந்து படிப்பினை பெறுவது தவிர்க்க முடியாததாகும். எமது வளங்களின் கொள்ளளவுக்கு ஏற்பவே எமது எதிர்காலக் கள விரிவாக்கம் சமநிலையாக விரிவடைய வேண்டும் என்பதே நாம் பெறும் படிப்பினை யாகும்.

இவ்விடயம், அண்மைக்கால தஃவா வர லாற்றால் கிடைத்த கட்டாயம் கவனம் செலுத்த வேண்டிய ஒரு படிப்பினை என்பது ஒரு புறம் இருக்க, இது தொடர்பில் இமாம் ஹஸனுல் பன்னா முன்னமே வலியுறுத்தி உள்ளார்கள். 1938 இல் நடந்த இஃவான் களின் ஐந்தாவது மாநாட்டில், களப் பணிக்கு முன்னால் செயல் வீரர்களைத் தரம் பிரித்து விளக்கிய இமாம் அவர்கள், வடித்தெடுக்கப் பட்டு தேர்ந்தெடுக் கப்பட்ட ஒரு குழுவினர் (ஸப்வா) இந்த தஃவா வின் முன்னோடிகளாக விளங்க வேண்டும் என மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்தினார்கள்.

இது வெறுமனே ஒரு கற்பனா வாதமல்ல எனவும் இமாம் அவர்கள் தங்களது உரையில் குறிப்பிட்டார்கள். இதே கருத்தை ஷஹீத் ஸைய்த் குதுப் (ரஹ்) அவர்களும் பிற்காலத்தில் ''ஜிஹாத் பணியை சுமக்கும் குழு'' என தனது எழுத்துக்களில் வர்ணித்தார்கள்.

அம்மாநாட்டில் உரை நிகழ்த்திய இமாம் அவர்களின் உரையில் இவ்விடயத்தை உள் ளடக்கிய பகுதி வருமாறு:

''இந்த இடத்தில் மிகவும் வெளிப்படை யாகவே ஒரு விடயத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகிறேன். ஏனெனில் இந்த விடயம் தொடர்பில் வெளிப்படையாக வும் பகிரங்கமாகவும் குறிப்பிடுவதுதான் பசு மரத்து ஆணிபோல் பயன்தரும். கருத்துகளை வெளியிடும் களம் கற்பனைக் களமல்ல! செயற் படும் களம் கருத்துக் களமுமன்று! ஜிஹாத் களமென்பது செயற்களத்திலும வேறுபட்டது. உண்மையான ஜிஹாத் களம் பிழையான ஜிஹாத் களத்திலிருந்தும் வேறுபட்டது..


**இஸ்லாமிய இயக்கத்தின் மிகக் கிட்டிய வரலாற்றை உற்று நோக்கினால், தரமானவர்களை விடவும் எண்ணிக்கையில் அதிகமானவர்கள் உள்வாங்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதனால் இஸ்லாமிய இயக்கம் நிறைய சிக்கல்களையும் உட்பூசல்களையும் எதிர்நோக்க வேண்டி இருந்தது. இன்றைய இஸ்லாமிய தாஈக்கள் இதிலிருந்து படிப்பினை பெறுவது தவிர்க்க முடியாததாகும். எமது வளங்களின் கொள்ளளவுக்கு ஏற்பவே எமது எதிர்காலக் கள விரிவாக்கம் சமநிலையாக விரிவடைய வேண்டும் என்பதே நாம் பெறும் படிப்பினையாகும்.**

அதிகமானோருக்கு கற்பனைத் தேரைத் தட்டிவிடுவது இலகுவான காரியம். ஆனால் உருவெளியில் சஞ்சரித்த கற்பனைகள் அனைத் தையுமே வார்த்தைகளாக வடிக்கமுடியாது. அதிகமானோருக்கு அதிகமான கருத்துகளைச் செப்ப முடியும். ஆனால் இவர்களுள் சொற்ப தொகையினருக்கே செயற்களத்தில் அவற்றை நடைமுறைப்படுத்திக் காட்டும் பொழுது நின்று பிடிக்க முடியும். இந்த சொற்ப தொகை யினரில் சிறு தொகையினருக்கே செயற்பட முடியும். இருப்பினும் இவர்களிலும் மிகவும் சிலரே கடினமான ஜிஹாத் சுமையை தாங்கிப் பிடித்து நிற்போராவர்.

மேலும் மிகவும் கடினமான பணிகளையும் இவர்களே செயற்படுத்துவர். இவர்களே முஜா ஹிதுகள் ஆவர். ஆம் வடித்தெடுக்கப்பட்ட சொற்ப அன்ஸாரித் தொண்டர்களும் அவர் களே! இவர்கள் இலட்சியப் பயணத்தில் பிழை விடலாம். இறைவனின் நாட்டம் இல்லாத போது இவர்கள் இலக்கை அடையாதிருக்க லாம். அவ்வாறே சிறிய கூட்டமும் இறை உதவியால் வெற்றியும் அடையலாம். இதற் கான படிப்பினை தரும் முன்னுதாரணமாக அக்கிரமக்காரன் ஜாலூத் மன்னனை சிறு கூட்டத்துக்குள் தோற்கடித்த தாலூத் மன்னனின் சம்பவம் அல்குர்ஆனில் விபரிக்கப்படுகின்றது.

எனவே, முறையான தர்பிய்யா நுட்பமான சோதனை என்ப வற்றுக்கு உங்களை உட்படுத்தி செம்மையாகத் தயார்படுத்திக் கொள்ளுங்கள். உள்ளத்திற்கு வெறுப்பான, கடினமான, திராணி யுள்ள செயல்களை செய்வதினூடாக உங்களது உள்ளங்களை நன்கு பண்படுத்திக் கொள்ளுங் கள். உள்ளம் ஊறித் திளைத்து, பரிச்சயமாக மாறிவிட்ட பழக்க வழக்கங்களைத் தவிர்த்தும் அதன் மனோ இச்சைகளைக் கட்டுப்படுத்தியும் உளப்பயிற்சி பெற்றுக் கொள்ளுங்கள்.''

தஃவா இயக்க வரலாற்றில் இந்த விடயம் தொடர்பில் தொடராகக் கவனக் குவிப்பு செய் யப்பட்டு வந்துள்ளதைக் காணலாம். தஃவாக் கட்டமைப்பை ஒரு தருணத்தில் வழிநடத்திய அஷ்ஷஹீத் ஸெய்யத் குதுப் (ரஹ்) அவர்கள் தனது மரணத்திற்கு முந்திய காலப் பகுதியில்




இது தொடர்பில் அதிக கரிசனை காட்டினார். அக்காலப் பகுதியில் அண்டை நாடான சூடானில் இஸ்லாமிய இயக்கத்திற்கு சார்பாக இலட்சக் கணக்கான பொது மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்து வந்தனர். இச் சந்தர்ப்பத்தில் சூடானின் இஸ்லாமிய இயக்க முன்னோடிகள் சிலர் செய்யித் குதுப் (ரஹ்) அவர்களை தரிசிக்க வந்தனர். சூடானில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களால் கலக்கமுற்றிருந்த அவர், அந்தத் தூதுக் குழுவினரிடம் கீழ்வருமாறு குறிப்பிட்டார்.

''பொது மக்கள் உங்களுக்கு ஆதரவளிப்பதற்காக திரட்சியாக அணிவகுத்து வருகின்றனர். இந்த ஈடுபாடு நீங்கள் தஃவா உட்கட்டமைப்பை ஒழுங்குபடுத்தி ஒருமுகப்படுத்துவதை விட்டும், புயல்போன்ற சோதனைகளுக்கு முகம் கொடுத்து உறுதியாக நின்றுபிடிக்கும் சாதனை மனிதர்களை தர்பிய்யத் மூலம் தயார்படுத்துவதை விட்டும், உங்களைப் பராக்காக்காது இருக்கட்டும்!'' என செய்யித் (ரஹ்) அவர்களை எச்சரிக்கை செய்தார்.

தஃவாக் கட்டமைப்பின் உள்ளக அணியினர், பிரத்தியேகமான பண்புகளைப் பெற்றுத் திகழ்வது மிகவும் முக்கியமானதாகும். அவர்களில் பொதிந்து கிடக்கும் ஆற்றல்கள் ஒருமுகப் படுத்தப்பட்ட முறைவழியினூடாக இலகுவான முறையில் பயன்படுத்தப்படும் சந்தர்ப்ப சூழல்கள் உருவாக்கப்படுவதும் இன்றியமையாததாகும். இருப்பினும் இவற்றோடு கவனக் குவிப்பைப் பெற வேண்டிய இன்னும் ஒரு முக்கிய அம்சமும் உண்டு.

இஸ்லாமிய சூழலின் வெட்டுமுகக் காட்சிகளைச் செறிவாகப் பிரதிபலிக்கும் ''முன்மாதிரியான தர்பிய்யா சமூக அமைப்பை'' உரு வாக்குவதிலும் தஃவாக் கட்டமைப்பு கவனம் செலுத்த வேண்டும். ''தர்பிய்யத் பெற வேண்டிய புதிய தலைமுறையினரை ஜாஹிலிய்யத்தான கோலங்கள் மற்றும் அவர்களிலிருந்தும் விலகச் செய்து தன்பால் கவர்ந்து உள்வாங்குவதாக இந்த முன்மாதிரியான சமூக அமைப்பு'' மிளிர வேண்டும். இதன் மூலம் தான் இஸ்லாம் அல்லாத ஜாஹிலிய்ய சூழல்களின் தாக்கங்களி

லிருந்தும் புதிய தலைமுறையினரைப் பாது காப்பது சாத்தியமாகும். இந்தக் கருத்தை இஸ்லாமிய உலகில் வாழ்ந்த பல இஸ்லாமிய அறிஞர்கள் அவர்கள் வாழ்ந்த கால கட்டங்க ளில் வலியுறுத்தி வந்துள்ளதைக் காணலாம்.

''தீமைகள் அரங்கேறும் சூழல்களை விரை ந்து சென்று கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது இஸ்லாமிய அரசின் மீதான கடமை யாகும். அப்பொழுதுதான் அத்தீமைகள் தாக்கம் செலுத் தாமல் முஸ்லிம்களைப் பாது காக்கலாம் என்பதாக இமாம் கஸ்ஸாலி (ரஹ்) குறிப்பிட் டுள்ளார்கள். மேலும் தீமைகளை நித்தமும் காண்பதால் அந்தப் பாவத்தின் கனதி உள்ளத் திற்கு ஐதாகி, அது பாவம் என்ற உணர்வே இல்லாமலாகி விடும். நாளடைவில் அந்தத் தீமையின் மீதான வெறுப்புணர்வும் மங்கி மழுங்கி விடும்'' என்பதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அன்று கூறிவைத்த இந்தக் கருத்தானது, நவீன தஃவாக் கட்ட மைப்புக்கு ஓர் முக்கிய உண்மையை உணர்த்து கிறது. தஃவாக் கட்டமைப்புக்குள் உள்ள அதன் தர்பிய்யத் வழங்கும் அணியினரின் ஆற்றல்கள் வளங்களையும் விஞ்சும் விதமாக அதிக எண் ணிக்கையிலானோர் உள்வாங்கப்படுகின்ற போது, இவர்கள் ஒவ்வொருவரிலும் அவர்கள் வளர்ந்த சூழல் பின்னணியைக் கொண்ட ஒரு சில ஜாஹிலிய்யப் பண்புகள் அவர்கள் மீது படிந்திருக்கும். இவைகள் இஸ்லாமிய ஷரீஆ வின் கண்ணோட்டத்தில் பாவங்களாகக்கூட இருக்கலாம்.

உள்வாங்கப்பட்டோரின் அதிக எண்ணிக்கை காரணமாக அவர்கள் அனைவரிலும் படிந் துள்ள இந்த ஜாஹிலிய்யப் படிமங்கள் ஒன்று சேர்ந்து திரட்சி பெறும்பொழுது வரையறுத்த ஆற்றல்களைக் கொண்ட தர்பிய்யத் அணியின ரால் அவைகளை நீக்குவது சிரம சாத்தியமாக அமையும். நாளடைவில் திரட்சியாக உள்ள ஜாஹிலிய்யப் பண்புகள் பரவி தூய்மையாக உள்ளவர்களுக்கும் தொற்றும் நிலை உருவா கும். ஏனெனில், ஜாஹிலிய்யப் பண்புகள் மிகைத்து நிற்கும் ஒரு சமூக சூழலில் சிறு தொகையினராக உள்ளோர் ஒன்றைக் கலந்து வாழும் பொழுது அந்தப் பண்புகளையும் கண் மூடித்தனமாகப் பின்பற்றும் நிலை உருவாகும்.

இதே விதி தனிப்பட்ட ஒரு தாஈயின் தனிப் பட்ட வாழ்விற்கும் பொருந்தும். இவர் சாமா ண்ய மக்களுக்கு மத்தியில் சென்று அதிகம் பிரச்சாரம் செய்வார். அதனால் அவர் தன்னை செயற்களத்தில் பயிற்றுவித்துக் கொள்கிறார். புதிய புதிய நபர்களையும் உள்ளீர்த்து தஃவாக் கட்டமைப்பையும் வளப்படுத்துவார். ஆனால் முற்றாகப் பொது மக்களுடன் கலந்துறவாடு வதற்காக அதிக நேரத்தை ஒதுக்கும் பொழுது, அந்த ஜனங்களால் புரியப்படும் மிகையான தீமைகள் அவரது உள்ளத்திற்குப் பாரதூரமான தாக அமையாமல் ஐதாகிவிடும்.

பொதுவாகப் பொது மக்களிடம் பாவ காரி யங்கள் பரவலாகவே காணப்படும். எனவே, இஸ்லாமியப் பிரச்சாரகர் இந்தப் பாவ காரி யங்களுக்கு எதிரான ஈமானிய காட்சிகளின் வெட்டு முகங்களைக் கண்டு தனது ஈமானின் உறுதி நிலையைப் புதிப்பித்துக் கொள்வதற் காக தூய தாஈக்களின் சூழல்களை அடிக்கடி நாடிச் சென்று வர வேண்டும். இவ்வாறாக வித்தியாசமான இரு சூழல்களிலும் சஞ்சரிக்கும் இஸ்லாமியப் பிரச்சாரகர் பொதுமக்களின் சூழ லால் துன்பத்திற்கு ஆளானால் அவரது உள்ளத் திற்கு சொஸ்தம் வழங்கும் சொர்க்கபுரியாக அறிஞர்களின் அவை விளங்கும்.

இஸ்லாமிய பிரச்சாரகர்கள் ஒவ்வொருவரும் சமூக சஞ்சாரம் செய்து அவர்கள் மேற்கொள்ளும் தர்பிய்யத் பணியின் கனதிக்கு ஏற்ப, அறிஞர் களின் அவைகளை அடிக்கடி தரிசனம் செய்து தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வதில் ஈடு பாடு காட்ட வேண்டும். சமநிலையான கள விரிவாக்கம் ஏற்படும் பொழுது தான் தாஈக்கள் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வதையும் உறுதிப் படுத்திக் கொள்ள முடியும். ஆக வரை முறையற்ற விரைவான களவிரிவாக்கமானது தஃவாக் கட்டமைப்பின் இன்றைய சக்தி வளங்களையும் உள்ளக ஆற்றல்களையும் சிதற டிக்கச் செய்வது போன்றே கடந்த கால விளைவு களையும் நலினப்படுத்தி விடும்.

# அஹமத் முஹம்மத் ஹஸ்ஸானைன்

## வரலாற்றுச் சுருக்கம்




### பிறப்பும் குடும்பப் பின்னணியும்

அஹமத் முஹம்மத் ஹஸ்ஸானைன் என்பதே அவரது இயற் பெயர். என்றாலும் ஹஸ்ஸானைன் என்ற பெயரினாலேயே பிரபல்யமடைந்தார். 1919 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி எகிப்தின் கல்யுப் என்ற நகரத்தில் சிறியதோர் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை ஒரு விவசாயி. அந்த விசாலமான கிராமத்தில் எல்லோராலும் அறியப்பட்டவராக அஹ்மத் ஹஸ் ஸானைன் காணப்பட்டார்.

### கல்வி வாழ்க்கை

இவர் தனது அத்தியவசியக் கல்வி, ஆரம்பக் கல்வி ஆகிய வற்றைத் தொடர்ந்து தொழினுட்பக் கல்லூரியில் தொழிற் கல்வியைக் கற்று 1938 ஆம் ஆண்டு அதிலிருந்து வெளியேறு கிறார். பின்னர் கோட்டையில் அதிரடிப்படையில் இணைந்து கொள்கிறார். இதன் காரணமாக தனது சொந்த ஊரை விட்டும் தூரமாக வேண்டி ஏற்படுகிறது.



அஷ்ஷெய்க்
ரஷாத் முஹம்மத்
coolrmohamed@gmail.com

### வழிகேட்டிலிருந்து நேர்வழியை நோக்கி...

தனது கிராமம் அரசியலில் ஒரு வெறுமையை அடைந்திருந்தது. பலம் வாய்ந்த எந்தக் கட்சியும் அங்கு காணப்படவில்லை. அங்கு 'வப்த்' மற்றும், 'மிஸ்ருல் வப்த்' ஆகிய இரு கட்சிகள் மாத்திரமே காணப்பட்டன. சிறிது காலம் இக்கட்சிகளுடனும், இன்னும் சிறிது காலம் விளையாட்டுக் கழகங்களுடனும் இணைந்து செயற்பட்டார். இவை எதுவும் ஒரு இலக்கை நோக்கி பயணிக்கவில்லை. அவற்றிலே ஓர் வெறுமை நிலை காணப்பட்டது.

ஒரு நாள் அதிரடிப்படையில் பணி புரியும் தனது நண்பனொருவன் இஹ்வானுல் முஸ்லிமூன்களின் மத்திய நிலையத்தில் இடம்பெறும் ஒரு விரிவுரையை செவிமடுக்க வருமாறு தனக்கு அழைப்பு விடுத்தார். அங்கு சென்ற போது இமாம் ஷஹீத் ஹஸனுல் பன்னா (றஹ்) அவர்கள் அங்கிருந்த சகோதரர்களுக்கு உள்ளத்தை உறுத்தும் ஒரு உரையை நிகழ்த்திக் கொண்டிருப்பதைக் கண்டார். அவற்றை மிகவும் கவனமாக செவிமடுத்து உணர்ந்து கொண்டார்.

ஒரு முஸ்லிமுக்கு அவசியமான விடயங்களை அவர் புரிந்துகொண்டார். அவ்வுரையைத் தொடர்ந்து இஸ்லாத்திற்காக தனது நேரம், உயிர் போன்ற அனைத்தையும் தியாகம் செய்வதாக இமாம் ஹஸனுல் பன்னா (றஹ்) அவர்களிடம் பைஅத் செய்கிறார். இது சுமார் 1940 களின் ஆரம்பத்தில் இடம்பெற்றது.

இந்த உரையைக் கேட்டது தொடர்பாக அவருடைய வார்த்தைகளில்... ''அவருடைய உரையை நான் கேட்கும்போது நான் வழமையாக அவருடைய உரையைக் கேட்டுப் பழக்கப்பட்டவன் போன்றதோர் உணர்வைப் பெற்றேன். எனது வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதை அறிந்துகொண்டேன். அவர் எதற்காக செயற்படுகிறார். நாம் அதற்காக எவ்வளவு தியாகம் செய்ய வேண்டும், செலவழிக்க வேண்டும் என்பதை கட்டம் கட்டமாக அறிந்துகொண்டேன். அதற்காக அனைத்து மனிதர்களும் கட்டாயம் தயாராக வேண்டும் என்பதையும் உணர்ந்துகொண்டேன்.

அந்த முதலாவது உரை யின் பின்னர் இமாம் அவர்களைத் தவிர வேறு எவரும் கதைக்கவில்லை. இந்தப் பணிக்காக தன்னைத் தயார்



படுத்தும் நோக்கில் மனத்திருப்தி அடைந்தவனாக நான் வெளியேறினேன்.

மேலும் அதிரப்படையிலுள்ள எனது நண்பர்களைச் சந்தித்தேன். அங்கு 300 பேர் வேலை செய்கின்றனர். அவர்களையும் இஹ்வான்களது விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு அழைப்பு விடுத்தேன். அடுத்த கட்டமாக 'செய்யிதா ஆஇஷா' என்னும் இடத்தில் ஷுஃபா ஒன்றை ஆரம்பித்தோம்.

நாம் எமது ஷுஃபாவில் ஒரு விரிவுரையை நிகழ்த்துவதற்குத் திட்டமிட்டிருந்தோம். அத்தினம் அல்லது அதற்கு முந்திய நாள் மக்களை விரிவுரைக்கு அழைப்பதற்காக பள்ளிக்குச் செல்ல வேண்டியிருந்தது. அது வியாழக் கிழமை. எனவே எனக்கு ஊருக்குச் செல்வதற்கான வாய்ப்பிருக்கவில்லை. நான் அத்தினம் வீடு செல்வது வழமையாக இருந்தது.

எனவே எனது தந்தை என்னிடம் ஏன் நீங்கள் வரவில்லை, நீங்கள் எங்கிருந்தீர்கள் என வினவினார். அப்போது நான் அவருக்கு பதில் சொல்லும் விதத்தில் அவரை இஹ்வான்களின் மத்திய நிலையத்திற்கு கூட்டிச் சென்று இமாம் ஹஸனுல் பன்னா (றஹ்) அவர்களுடைய உரையை செவிமடுக்கச் செய்தேன். அப்போது நான் எதற்காக நேரத்தைக் கழிக்கிறேன் என்பதை அறிந்துகொண்டார்.

அதற்கடுத்த கிழமை எனது சிறிய சகோதரன் எனது தந்தையோடு சமுகமளித்தபோது அவர்களுக்கு இஹ்வானுல் முஸ்லிமூன்களை அறிமுகப்படுத்தி வைத்தேன். நான் எவ்வாறு இமாமவர்களின் உரையால் தாக்கமடைந்தேனோ அவ்வாறே அவர்களும் தாக்கமடைந்தார்கள். மேலும் எனது சகோதரிக்கும் அதனை அறிமுகம் செய்துவைக்கும் வாய்ப்பு கிடைத்தது. இவை அனைத்திற்கும் அப்பால் அவர்களாகவே விரிவுரைகளுக்கு வந்துசெல்லக் கூடிய நிலமை உருவாகியது. அங்கு அவர்களோடு நான் இருக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. மேலும் அவர்கள் எனது தஃவா செயற்பாடுகளுக்கு பெரிதும் உதவக்கூடியவர்களாக இருந்தனர்.

இவரது தந்தை இந்த தஃவாவில் ஏற்பட்ட சோதனைகளை பொறுமையாக எதிர்கொண்டு 1968 ஆம் ஆண்டு இறையடிசேரும் வரை இந்த தஃவாவிற்காக பணியாற்றிய ஒருவரார்.

### சோதனையும், மரணமும்

அஹ்மத் ஹஸ்ஸானைன் 1947 ஆம் ஆண்டு சிறைபிடிக்கப்பட்டு 1950 இல் விடுவிக்கப்பட்டார். பின்னர் மீண்டும் 1954 ஆம் ஆண்டு சிறை பிடிக்கப்பட்டு 1974 இல் விடுவிக்கப்படுகிறார். சிறையிலிருந்து வரும்போது உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் தைரியமானவராகவே வெளிவந்தார்.

நோய்வாய்ப்பட்ட நிலையில் இருக்கும் போது அவரை பார்க்க வருபவர்கள் அவதானித்த ஒரு விடயம் தான், அவர் எப்போதும் அல்லாஹ்வை திக்ர் செய்தவராகவும், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவராகவும் இருந்ததாகும்.

இமாம் ஹஸனுல் பன்னா அவர்களின் மகன் யூசுப் இஸ்லாம் அவர்கள் இவரைப் பற்றிக் குறிப்பிடும்போது ''தந்தை, ஏதாவது கஷ்டமான பொறுப்புக்கள் இருந்தால் அதனை அஹ்மத் ஹஸ்ஸானைனுக்குக் கொடுங்கள். அவர்தான் அதனை நிறைவேற்றுவதற்கு பொருத்தமானவர்'' எனக் கூறுவார்.

அஹ்மத் ஹஸ்ஸானைன் அவர்கள் பிறந்த மாதமும் திகதியும், இறந்த மாதமும் திகதியும் ஒன்றாக இருந்தது. (பிறப்பு 1919.12.22 - இறப்பு 2007.12.22) ஐந்தாவது முர்ஷிதுல் ஆம் உஸ்தாஸ் முஸ்தபா மஷ்ஹூரின் மரணத்தை செவிமடுத்ததிலிருந்து தனது மரணம் வரை 4 வருடங்கள் படுக்கையிலேயே கழித்தார். இவர்கள் இருவரைப் (அஹ்மத் ஹஸ்ஸானைன், முஸ்தபா மஷ்ஹூர்) பற்றியும் வர்ணிக்கும்போது ஒரு பறவையின் இரு சிறகுகள் போன்றவர்கள் எனப்படுகின்றனர்.

abuubaid08@gmail.com

# பயணமும் ஒரு வணக்கமே!


பூவுலக வாழ்வு பூர்வீக மறுமை நோக்கிய ஒரு பயணம். மானிடர்களில் பல கோடிப்பேர் மறந்து விட்ட பெரிய உண்மை இது. அது ஒரு புறம் இருக்க வாழ்வுக்கும் மாள்வுக்கும் இடையிலான இந்த சொற்ப கால வாழ்வில் தான் எத்தனை எத்தனை பயணங்கள்! முழுப் பூமிப்பந்தையுமே புனித மஸ்ஜிதாக அல்லாஹ் எனக்கு ஆக்கி அருளியுள்ளான்''. என்ற ஆசீர்வாதத்தை நபி (ஸல்) ஹதீஸாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அப்படியாயின் தாயின் கர்ப்பத்தில் விந்தணுக்கள் அங்கும் இங்கும் நீந்தி சஞ்சரிப்பது போல் பூகோளதளத்தில் மானிடர்கள் மேற்கொள்ளும் சஞ்சாரங்களும் பயணங்களும் அதற்குரிய நிய்யத்துகளும் நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டால் இபாதத்கள் தான் என்பதில் என்னதான் சந்தேகம் இருக்க முடியும்! எனவே, முழு வாழ்வுமே வணக்கம்! முழு உலகமுமே மஸ்ஜித்!! எவ்வளவு எளிய மார்க்கம் இஸ்லாம்!

பயணத்தை வணக்கமாக்க ஸலபுகளான நம்முன்னோர் ஷரீஆவின் நிழலில் முறைவழிகள் பலவற்றை நிறைவாக வகுத்தளித்துள்ளனர். அவற்றுள் சில முத்துக்களை பொறுக்கி எடுத்து முத்திங்களான 'பயணம்' சஞ்சிகையின் இறுதிப் பக்க கழுத்து வடத்தில் 'பயணமும் ஒரு வணக்கம்' என்ற தலைப்பில் சரமாகத் தொகுத்து வழங்க முனைகிறோம். இன்ஷா அல்லாஹ்!

பயணம் செய்ய நாடுவோர் தான் செய்யவிருக்கும் பயணம் தொடர்பில் அது பற்றிய அறிவு, அநுபவம் உள்ளவர்களுடன் கலந்தாலோசிப்பதும், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதும் முஸ்தஹப் ஆகும்'' *(3:159)* என்ற அல்குர்ஆன் வசனம் இதற்கு வழிகாட்டுகிறது.

அனுபவசாலிகளிடம் சென்று ஆலோசனை கேட்க 'மொபைல் போன்' தலைமுறையினருக்கு நேரம் இருக்குமா என்பது சிந்திக்க வேண்டிய விடயமே! பயணத்தின் சாதக பாதகங்களைக் கலந்துரையாடிய பின்னர், அனுகூலங்கள் தான் கூடுதலாக இருப்பதாக உணர்ந்தால், அல்லாஹ்விடம் நலவை வழங்குமாறு நாடி 'ஸலாதுல் இஸ்திஹாரா' இரண்டு ரகஅத் தொழலாம். அதன் முதல் ரகஅத்தில் ஸூறா காபிரூன் இரண்டாம் ரகஅத்தில் ஸூறா இஃலாஸ் ஓதலாம் என இமாம் நவவி(ரஹ்) குறிப்பிடுகிறார்.[1]



1) இதற்கு ஆதாரம் கிடையாது. அல் ஹாபிழ் ஈராக்கி (ரஹ்). இந்த இரு ஸூறாக்களும் இக்லாஸைக் காட்டுவதால் இமாம் நவவி (ரஹ்) அவர்களின் தெரிவு பொருத்தம் என சில அறிஞர்கள் கருதுகின்றனர். (பார்க்க அல்-அஸ்கார், பக்கம் - 120)

பயணத்தை நாடுபவர் இரண்டு ரகஅத்துகள் தொழுவதே அவர் தனது குடும்பத்துக்கு விட்டுச் செல்லும் மிகப் பெரிய சொத்தாகும். (தபரானி) நபி (ஸல்) அவர்கள் அல்-குர்ஆனில் ஒரு ஸூறாவைக் கற்றுக் கொடுப்பது போன்று அனைத்து விடயங்களிலும் ஸலாதுல் இஸ்திஹாரா தொழக் கற்றுத் தந்தார். இரண்டு ரகஅத்களை நபிலாகத் தொழுதுவிட்டு, கீழ்வரும் துஆவை ஓதுமாறும் அவர் எம்மை வேண்டிக் கொண்டார் என ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரழி) அறிவிக்கிறார்கள்.

اللَّهُمَّ إنِّي أَسْتَخِيرُكَ بِعِلْمِكَ , وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ , وَأَسْأَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيمِ فَإِنَّكَ تَقْدِرُ وَلا أَقْدِرُ , وَتَعْلَمُ وَلا أَعْلَمُ , وَأَنْتَ عَلامُ الْغُيُوبِ , اللَّهُمَّ إنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ خَيْرٌ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي أَوْ قَالَ : عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ , فَاقْدُرْهُ لِي وَيَسِّرْهُ لِي ثُمَّ بَارِكْ لِي فِيهِ , اللَّهُمَّ وَإِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ شَرٌّ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي أَوْ قَالَ : عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ , فَاصْرِفْهُ عَنِّي وَاصْرِفْنِي عَنْهُ وَاقْدُرْ لِي الْخَيْرَ حَيْثُ كَانَ ثُمَّ ارْضِنِي بِهِ. ( رَوَاهُ الْبُخَارِيُّ (1166)

''யா அல்லாஹ்! நான் உன்னிடம் உனது ஞானத்தைக் கொண்டு நன்மையை யாசிக்கின்றேன். மேலும் உனது ஆற்றலைக் கொண்டு ஆற்றலை யாசிக்கிறேன். மேலும் உன்னிடமிருந்து உனது மகத்தான அருளை யாசிக்கின்றேன். ஏனெனில், நீ ஆற்றல் பெற்றவன். என்னிடம் எந்த ஆற்றலும் இல்லை. மேலும் நீ நன்கு அறிபவன். நான் எதுவும் அறியேன். மேலும் நீ மறைவானவை அனைத்தும் அறிந்தவன். யா அல்லாஹ்! இந்தப் பணி எனக்கும் - எனது தீனுக்கும் எனது வாழ்க்கைக்கும் எனது விவகாரத்தின் முடிவுக்கும் - அல்லது எனது உடனடியான தாமதமான விவகாரத்திற்கும் நன்மையானது என நீ அறிந்தால் இதனை எனது விதியில் சேர்ப்பாயாக! மேலும் இதனை எனக்கு எளிமையாக்கித் தருவாயாக! பிறகு இதில் எனக்குப் பாக்கியம் செய்தருள்வாயாக! ஆனால் இந்தப் பணி எனக்கும் எனது தீனுக்கும் எனது வாழ்க்கைக்கும் எனது விவகாரத்தின் முடிவுக்கும் அல்லது எனது உடனடியான தாமதமான என் விவகாரத்திற்கும் தீமையானது என நீ அறிந்தால் இதனை என்னை விட்டு அகற்றி விடுவாயாக! இதனை விட்டு என்னையும் திருப்பிவிடுவாயாக! மேலும் எனது விதியில் நன்மையை சேர்ப்பாயாக, அது எங்கிருந்தாலும் சரியே! பிறகு அதில் எனக்குத் திருப்தியை ஏற்படுத்தித் தருவாயாக!'' (புஹாரி, பாகம்: 7, பக்: 162)

- இதனைத் தொடர்ந்து பயணப் பாதுகாப்பிற்காக ஆயதுல் குர்ஸியை ஓதிக்கொள்ளலாம்.
- ஸூறா குறைஷ் ஓதுவதால் பயணத்தில் தீங்குகளைத் தவிர்க்கலாம் என சாபி மத்ஹப் சட்ட வல்லுனரும் பல கராமத்களைக் காட்டிய இமாம் அஸ்வீனி குறிப்பிடுகிறார். (பார்க்க: அல் அஸ்கார்: 27)

இந்த இடத்தில் தான் மேற்கொள்ளப்போகும் பணியின் பெயரைக் குறிப்பிடவும். துஆவின் முடிவில் உள்ளத்தில் தோன்றும் தீர்மானத்தை இறுதி முடிவாக எடுக்கலாம். அல்லாஹ் மிக அறிந்தவன்.

ஒவ்வொரு வசனங்களையும் நீ துருவிக் கிரிகிறாய் என்றால்,
உனக்கு சொல்லப்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றையும் நீ
ஆராய்கிறாய் என்றால்,
உனக்கு தீங்கிழைக்கவர்களை விசாரிக்கிறாய் என்றால்,
உன்னை ஏசுபவர்களுக்கு நீ பதிலடி கொடுக்கிறாய் என்றால்,
உன்னை எதிர்க்கவர்களை நீ பழி தீர்க்கிறாய் என்றால்,

நீ உடைந்த மனதுடனும், சஞ்லக்துடனும், கவலையுடனும்,
நிம்மதியின்றியும், கவலை அப்பிய தோற்றக்துடனும்,
மோசமான நிலைமையிலுமே வாழ்வாய்.

மறந்து வாழ்வது ஒரு உயர்ந்த கலை. மகிழ்வை தொழிலாக
செய்பவர்களால் மட்டுமே அதனை திறம்பட செய்ய முடியும்.

கலாநிதி ஆயிழுல் கர்னி

Registered as a Newspaper in GPO - QD/73/NEWS/2015
Printed: AJ Prints (Pvt Ltd), Dehiwala.